வெகுதானிய கார்த்திகை

# சைவநீதி

சைவ வளர்ச்சி கருதிய செய்தி தரும் மாத இதழ்




வத்தளை ஹேகித்த

அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

வருடாபிஷேக-மணவாளக் கோலச்-


## சிறப்பிதழ்

1998.12.06

உ

சிவமயம்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



ஆரூர னில்லைப் புகலியர் கோனில்லை யப்ப னில்லைச்
சீரூரு மாணிக்க வாசக னில்லைத் திசைய ளந்த
பேரூரு மாறு முகநா வலனில் லைப்பின் னிங்கியார்
நீரூரும் வேணியன் மார்க்கத் தைப்போ திக்கு நீர்மையரே

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சைவநீதி

மலர் 2 வெகுதானிய கார்த்திகை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 8

கௌரவ ஆசிரியர்
சைவப்புலவர்மணி
வித்துவான்
திரு. வ. செல்லையா

நிர்வாக ஆசிரியர்
திரு.செ. நவநீதகுமார்
42. ஜானகி லேன்,
கொழும்பு 04.

பதிப்பாசிரியர்
திரு. மு. கௌரிராஜா.

## என் கடன் பணி செய்து கிடப்பதே

"வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி" என்பது அப்பர் வாக்கு. எமது நலனுக்காக நாம் வாழ்வது சிறப்பன்று. பிறருக்கு நலம் செய்யும் வண்ணம், பயன்படும் வண்ணம் எமது செயல்கள் அமைவது சிறந்தது. "தன் பெரு முடலைப் புறவினுக்கருளிய அன்பினை விளக்கிய அரசருமுளரே" என்ற நிலையில் இருந்தவன் சிபிச் சக்கரவர்த்தி. தமது சத்திக்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் பணி செய்வது சாலச் சிறந்தது. இறை பணி, சமயப்பணி, சமூகப் பணி, சிவாலயப் பணி எனப்பல பணிகளுள் ஏதாவதொன்றையாவது செய்து பிறவிப்பயன் பெறுவதே வேண்டற்பாலது.

சைவ சமய வளர்ச்சி கருதி வெளிவரும் "சைவ நீதி" மாத இதழ் ஆலய வரலாறுகள் பலவற்றைத் தந்து கொண்டிருக்கின்றது. சிறப்பாகச் சில ஆலய விழாச் சிறப்பு மலராகச் "சைவநீதி" வெளி வந்து மணம் பரப்புகிறது. இம்மாத இதழும் ஆலயத்திருவிழாச் சிறப்பு மலராக வெளிவருகிறது. சைவநீதி மூலம் தமது ஆலயம் பற்றிய வரலாற்றைச் சைவ உலகிற்கு வெளிக் கொணரும் ஆலயத் தொண்டர்கள் பணி சிறந்த சைவப் பணியாகும். இறைவன் எம்மைத் தாங்கிக் கொள்கிறான். காத்துக் கொள்கிறான். அவன் அருள்வழி பணி செய்வது எமது கடமையாகும்.

*நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்*
*தென்கடம்பைத் திருகரக் கோயிலான்*
*தன்கடன் அடியேனையும் தாங்குதல்*
*என்கடன் பணி செய்து கிடப்பதே.*

உ

சிவமயம்

# சைவ நீதி

## பொருளடக்கம் :


| | | | |
|---|---|---|---|
| 1. | என் கடன் பணி செய்து கிடப்பதே. | – ஆசிரியர் | 1 |
| 2. | பொருளடக்கம். | – | 2 |
| 3. | வாழ்த்துச் செய்தி. | – திரு. க. இராஜபுவனீஸ்வரன் | 3 |
| 4. | வாழ்த்துரை. | – காப்பாளர் – ஆலயம் | 4 |
| 5. | சைவ நீதி வாழ வேண்டும். | – பொருளாளர் – உப பொருளார் | 5 |
| 6. | ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான விரதங்களும், விழாக்களும். | – ஆலய பரிபாலன சபையினர் | 5 |
| 7. | ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் வழிபடுமிடமாக வளர்ந்த கதை. | – ஆலய பரிபாலனசபையினர் | 6 |
| 8. | அழகொளிரும் ஆலயம். | – பண்டிதர் சி. அப்புத்துரை | 9 |
| 9. | சுருக்க விடை தருக. | – மாதினி | 11 |
| 10. | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் உபதேசம். | – கயப்பாக்கம் சோமசுந்தரம் | 12 |
| 11. | புவியிலே தோன்றிய தன்னிகரிலாத் தலைவன். | – திருமுறைக் கழகம், சித்தங்கேணி | 13 |
| 12. | மாறிலா மாக்கருணை வெள்ளம். | – முருக. வே. பரமநாதன் | 14 |
| 13. | முருக பக்தி மேம்பாடு. | – சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்கள் | 17 |
| 14. | காந்தமலை. | – வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் | 18 |
| 15. | விபூதியின் பெருமை. | – மா. ப. பாலதுரை | 20 |
| 16. | நாவலர் அவதரித்தார் நல்லை நகர் தனிலே. | – வித்துவான் வ. செல்லையா | 21 |
| 17. | தொழுநோயாளர் தொழுமிடமாயமைந்த ஆலயம் | – சி. கந்தசாமி | 23 |
| 18. | திருவிளையாடற் புராணம்: குண்டோதரனுக்கு அன்னமிட்டமை. | – கூடலான் | 26 |
| 19 | சைவ நீதி எங்கும் பரந்து பரிமளிப்பதாக. | – ரவி சிவகுமார் | 28 |
| 20. | எங்களூர் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம் | – மா. முத்துக்குமார் | 29 |
| 21. | ஆலய தரிசனமும் அறநெறி வளர்ச்சியும் | – பொன். நவராஜா | 31 |
| 22. | ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் - 1999 இல் நடை பெறவுள்ளவை. | – சிவாசாரியர் | 33 |
| 23. | திருவாசகத் சிந்தனை - திருத்தெள்ளேணம். | – பண்டிதர் சி. அப்புத்துரை | 37 |
| 24. | ஆனாய நாயனார் | – சிவ. சண்முகவடிவேல் | 41 |
| 25. | விரதங்களும் விழாக்களும். | – சிவஸ்ரீ சி. தியாகராஜக் குருக்கள் | 43 |
| 26. | கடந்த இரண்டு வருட காலத்துள் நடைபெற்ற சிறப்புப் பணிகள். | – ஆலய பரிபாலன சபையினர் | 44 |
| 27. | திருவூஞ்சற் பாமாலை | – செல்லையா நவநீதகுமார். | 45 |
| 28. | பரிபாலனசபைச் செயற்குழுவினரின் சிந்தனைகள் | – பரிபால சபைச் செயற் குழுவினர் | 47 |
| 29. | பக்திப்பாமலர் | – பண்டிதர் சி. அப்புத்துரை | 48 |



சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர் – இதழ் நிர்வாகிகள்.

கொழும்பு விவேகானந்த சபைப் பொதுச் செயலாளர்

திரு.க. இராஜபுவனீஸ்வரன்

# வாழ்த்துச்செய்தி

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் என்ற உலகளாவிய சிந்தனையுடையது எமது சைவ சமயம். ஆழமான தத்துவத்தையும், நாயன்மார்களது அனுபவங்களையும் கொண்டது எமது சமயம். "வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் நிலையை எமது சைவ சமயம் புகட்டுகின்றது. மனிதப் பண்புகளை வளர்த்து உயர்ந்த ஒழுக்க சீலராய் நாம் வாழ்வதற்கு எமது சமய நூல்கள் வழிவகுக்கின்றன. காலத்துக்குக் காலம் பல சமய நூல்கள் தோன்றுவதனால் எமது சமயத்தின் வளர்ச்சி விரிவடைகின்றது என்று சொல்லலாம்.

இந்த எண்ணத்துடன் "சைநீதி" மாதாந்த வெளியீட்டை எமது மக்கள் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை. தமிழ் சமய அறிவை மக்கள் மத்தியிற் பரப்புவதற்காக இவ் இதழ் வெளிவருகின்றது.

வெகுதானிய கார்த்திகையில் வெளிவருகின்ற இவ் இதழினைக் ஹேகித்த சிவசுப்பிரமணியர் ஆலய பரிபாலன சபையினர் வெளியிடுவது வரவேற்கத் தக்க விடயமாகும். சிறப்பாக இந்த இடத்திலே எழுந்தருளி இருக்கும் இவ் ஆலயம் நல்ல சைவப்பணிகளைச் செய்து வருவதை நாம் அறிவோம். குறிப்பாக அற நெறிப் பாடசாலையைத் திறம்பட நடத்தி வருகிறார்கள். ஆலயத்திலே நித்திய பூஜையும், திருவிழாக்களும் சற்றேனும் குறைவின்றி நடைபெற்று வருகின்றன என்பதை நாம் நன்கு அறிவோம்.

*மென்மேலும் இறை பணி பெருகவேண்டுமென வாழ்த்தி அமைகின்றேன்.*

1998.11.23

க. இராஜபுவனீஸ்வரன் J.P

*கௌரவ பொதுச் செயலாளர்.*

# வாழ்த்துரை

"இறைவா என்று இரைச்சல் போடுபவனை விட, இறைவனுடைய ஆணையைச் செயலுக்குக் கொண்டு வருபவன் மேலானவன் என்றார் சுவாமி விவேகானந்தர். அந்த வகையில், இன்று உலகளாவிய ரீதியில் வளர்ச்சியடைந்து நிற்கும் சமயம் என்பதற்குச் சான்றுகளாக, எங்கெல்லாம் சைவத் தமிழர் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கோயில் கட்டுவதும், விழா எடுப்பதும், வழிபாடு செய்வதும் நடைமுறை நிகழ்ச்சிகளாகி விட்டன. சிறப்பாக, வத்தளை ஹேகித்தையில் கோயில் கட்டியதும் விழா எடுத்ததும் ஒரு பெருமையான நிகழ்வென்றே கருத வேண்டியுள்ளது. அந்த வகையில் இம் மாபெரும் நிகழ்விற்கு உறுதுணையாகிச் செயற்பட்ட அனைத்து அடியார்களும் அதனை செம்மையுற நிறைவேற்றிய நிர்வாக சபையினரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. இச் சபையின் காப்பாளர் என்ற வகையில் "என்னையும் அடியனாக்கி இருவினை நீக்கியாண்ட பன்னிரு தடந்தோள் வள்ளல் பாத பங்கயங்களைப் போற்றுகின்றோம். மக்கள் சமூக உணர்வுடனும் சமய அறிவுடனும் வாழ வேண்டும், என வாழ்த்துகின்றோம். மக்களை இந்த நெறிக்கு இட்டுச் செல்லும் சைவநீதி இதழும் அதன் நெறியாளர்களும் முருகன் முழுமையான அருள் பெற்று நீடு வாழ்வார்களாக.

| | | |
|---|---|---|
| ஆ. முத்தையா | மா.ப. பாலதுரை | இ. கந்தசாமி |
| பொன். சண்முகராசா | | க. தமிழ்வாணன் |

**காப்பாளர்**

வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயப் பரிபாலன சபை

# சைவநீதி வாழ வேண்டும்

ஆன்மீக இதழான "சைவநீதி" இம்மாத மலர் வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி இரண்டாவது மணவாளக் கோல விழாச் (வருஷாபிஷேகச்) சிறப்பு மலராக வெளிவருவதில் பெருமையும் அளவிலா ஆனந்தமும் அடைகின்றோம்.

சைவநீதி இதழ் ஆசிரியர் குழு மற்றும் அங்கு கடமையுரியும் அனைவருக்கும் எமது நன்றிகளைக் கூறி இத்தொண்டு மென்மேலும் வளரவேண்மென வாழ்த்துகின்றோம்.

எமது கோயில் சிறந்து விளங்க இது நாள்வரை பல வழிகளிலும் தொண்டுகள் புரிந்த, ஒத்தாசை தந்த, நிதி - பொருளுதவி தந்த அனைவருக்கும் மனம் கனிந்த நன்றிகள். இன்றுபோல் என்றும் உங்கள் ஒத்துழைப்புத் தொடர வேண்டுமெனப் பணிவாக வேண்டுகிறோம்.

அன்பு நிறைந்த அடியார்கள் அனைவருக்கும் நன்றிகூறிச் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமியின் திருவருள் கிட்டப் பிரார்த்தித்துச், சைவநீதி மலர் சிறப்புப் பெற வாழ்த்துகிறோம்.

*வணக்கம்*

**M. சண்முகவேல்**
*பொருளாளர்*

**S. ஆறுமுகம்**
*உப - பொருளாளர்*

### வத்தளை ஹேகித்த
### அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்
### விரதங்களும் விழாக்களும்

| | | |
|---|---|---|
| சித்திரை | : | வருடப்பிறப்பு, சித்திராப் பௌர்ணமி, சித்திர குப்த விரதம். |
| வைகாசி | : | அலங்கார உற்சவம், உற்சவ நிறைவிற் தேர்த் திருவிழா. |
| ஆனி | : | ஆனி உத்தரம். |
| ஆடி | : | ஆடிப்பிறப்பு, ஆடிப்பூரம், ஆடிச் செவ்வாய், ஆடிஅமாவாசை. |
| ஆவணி | : | ஆவணி ஞாயிறு, விநாயக சதுர்த்தி, கிருஷ்ண ஜயந்தி. |
| புரட்டாதி | : | புரட்டாதிச் சனி, நவராத்திரி விரதம், விஜயதசமி, கௌரி விரதம். |
| ஐப்பசி | : | தீபாவளி, கந்த ஷஷ்டி (பத்து நாள்கள் உற்சவம்), ஐப்பசி வெள்ளி. |
| கார்த்திகை | : | திருக்கார்த்திகை, விநாயகர் விரதம், புனர்பூச நட்சத்திர வருஷாபிஷேகம்(மணவாளக் கோலம்). |
| மார்கழி | : | திருவெம்பாவை. |
| தை | : | தைப்பொங்கல், தைப்பூசம். |
| மாசி | : | மாசிமகம், மகா சிவராத்திரி. |
| பங்குனி | : | பங்குனி உத்தரம். |

*குறிப்பு : கார்த்திகை நட்சத்திரவிழா, சதுர்த்திப் பூஜை, பௌர்ணமித்தினத் திருவிளக்குப் பூஜை என்பன மாதந்தோறும் நடைபெறுவன.*

பரிபாலன சபையினர்

# வத்தளை ஹேகித்த
# அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்
# வழிபடுமிடமாக வளர்ந்த கதை

பல்லாயிரக் கணக்கான சைவ மக்கள் வாழ்ந்து கொண்டிருந்தும், வத்தளையில் ஒரு சைவ வழிபாட்டிடம் அமைய வேண்டுமென 1950 இற்கு முன் யாருஞ் சிந்தித்தாகத் தெரியவில்லை. அங்கிருந்த தொழுநோய் வைத்தியசாலையில் மருத்துவ உதவி பெற்று வந்த நோயாளரது தெய்வ வழிபாட்டு நலனைக் கருத்திற் கொண்ட கொழும்பு விவேகானந்த சபையினர் சைவப் பிணியாளர் நலன்புரிச் சங்க அங்கீகாரத்துடன் அங்கு ஒரு கோயிலை அமைக்க முன்வந்தனர். அரசினரின் அனுமதியுடன் 1956 இற்கு அண்மையான காலப்பகுதியில் வைத்தியசாலை வளவில் ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம் என்னும் பெயருடன் ஒரு கோயிலை அமைத்தனர். அதன் நித்திய நைமித்திய பூசை நியமங்களையும் ஒழுங்காக நடைபெறச் செய்தனர்.

1983 ஆம் ஆண்டு நடைபெற்ற பொருத்தமற்ற நிகழ்வுகளால் ஆலயத்திலிருந்த விக்கிரகங்கள் காணாமற் போயின. ஆலயமும் சேதமடைந்து கவனிப்பாரற்றுக் கிடந்தது. வழிபாடு பற்றிய சிந்தனைக்கே இடமில்லாத வகையில் அந்த இடம் மாறியது.



அழிவுகள் காரணமான தாக்கங்கள், காலப் போக்கில் வழிபாட்டுத் தேவையை மேலோங்கச் செய்தன. எமக்கென்று எங்கள் சூழலில் சிவாலயம் ஒன்று இருக்க வேண்டுமெனப் பலர் உணரத் தலைப்பட்டனர். இந்த உணர்வு வேகம் எங்களை ஒன்று கூட வைத்தது. ஆலயம் அமைப்பதற்கென ஒரு நிலப்பகுதியைப் பெற்றுக் கொள்ள எவ்வளவோ முயற்சி செய்தோம். பயனளிக்கவில்லை. இறுதியாக வத்தளை, ஹேகித்த என்னும் இடத்தில் இயங்கிய தொழுநோயாளர் வைத்திய நிலயக் காணியில் எமது கவனம் நிலைபெற்றது. கொழும்பு விவேகானந்த சபையினரால் தொழு நோயாளர் நலனுக்காக அமைக்கப்பட்ட ஆலயம் சிதைவுற்றுக் கவனிப்பாரற்று இருந்த நிலை எம் மனத்தை உறுத்தியது. வத்தளைப் பிரதேசத்தின் உயர்வின்மைக்குத் தொழுநோய் வைத்திய நிலைய வளவிலமைந்த முருகன் ஆலயம் இருள் சூழ்ந்திருப்பதுதான் காரணம் என்ற எண்ணம் பலரது மனதிற் தாக்கத்தை விளைவித்தது.

இந்த நிலை, மக்கள் பலருடைய கையொப்பம் பெறப்பட்ட விண்ணப்பமொன்றை விவேகானந்த சபையினருக்கும், சைவப் பிணியாளர் நலன்புரிச் சங்கத்தினருக்கும் அனுப்பி வைக்கச் செய்தது. முன்னைய ஆலயத்தைப் பொறுப்பேற்கும் தேவை நோக்கி எம்மிடையே ஒரு

மன்றம் தோற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த முயற்சியில் இறங்கிய நாம் 1989 ம் ஆண்டு நடுப்பகுதியில் ஹெந்தளை, வத்தளை, பலகல வீதியிலுள்ள 128/5 என்னும் இலக்கத்திலமைந்த, இன்றைய ஆலய பரிபாலன சபையின் மூத்த காப்பாளர் திரு மா.ப. பாலதுரை அவர்களது இல்லத்தில் அவர்களது தலைமையில் ஒன்று கூடினோம். இன்று தலைமைப் பொறுப்பை ஏற்று நடைமுறைப்படுத்தும் திரு. ரவி சிவகுமார் அவர்களே அன்றும் தலைமையை ஏற்றார்கள். நிருவாக சபை ஒன்றையும் அமைத்துச் செயலில் இறங்கினோம்.

இந்த அங்குரார்ப்பணக் கூட்டத்தைத் தொடர்ந்து சில துர்ப்போதனையாளர்களின் நடவடிக்கைகளினாற் பல இடையூறுகளைச் சந்திக்க நேர்ந்தது. இதனால் தொடர்ந்து கூட்டங்களை நடத்த முடியாத நிலை உருவாகியது. அதற்காக நாம் எமது செயற்பாடுகளை நிறுத்தவில்லை. ஆலயப் புனருத்தாரண வேலைகளை எமதாக்கிக் கொள்ளத் திருவருட்டுணையுடன் முயன்று கொண்டிருந்தோம். விவேகானந்த சபை நிருவாகத்தினரும், சைவப் பிணியாளர் நலன்புரிச் சங்கத்தினரும் எமக்குப் பேருதவி அளிப்பவர்களாக இருந்தனர். மேல் மாகாண சபை நெடுஞ்சாலைகள் அமைச்சரும் எமக்கு ஆதரவளிப்பவராயினார். இவர்கள் ஆதரவுடன் தெய்வநெறிப் பொதுப் பணி மன்றம் என்று யாம் அமைத்த அமைப்பிற்கு, முன்னைய ஆலயத்தை ஏற்று நடத்தும் பொறுப்பைச் சுகாதார அமைச்சு வழங்கியது.

திருமுருகன் திருவருளினால் 1991 டிசம்பர் முதலாந் திகதி, ஆலயத்தில் மீதமாக விடப்பட்டிருந்த (கருங்கல்) விநாயகனைப் பாலஸ்தாபனஞ் செய்து புனருத்தாரண வேலைகள் ஆரம்பமாயின. கொழும்பு, பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய முதன்மைக் குரு பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்கள் பாலஸ்தாபனக் கிரியைகளைச் செய்து திருப்பணி தொடர வழி சமைத்தார்கள். தொடர்ந்து 1992 முற்பகுதியிலிருந்து திருப்பணி எனுஞ் சிவப்பணி வேகமாக வளர்ந்தது. வத்தளை வாழ் சைவப் பிள்ளைகளின் சைவ சமய அறிவை வளர்ப்பது நோக்கமாக அறநெறிப் பாடசாலையும் இயங்கத் தொடங்கியது. விநாயகப் பெருமானுக்கான பூசைகள், வழிபாடுகள், பிரார்த்தனைகள் எல்லாம் ஒழுங்காக நடைபெற்றன.

அதே ஆண்டின் நடுப்பகுதியில், ஆலயத் திருப்பணி வேலைகளை உடனடியாக நிறுத்துமாறும், பூசை, வழிபாடு என்பவற்றை மட்டும் தொடருமாறும் அரசு எம்மைப் பணித்தது. பேரதிர்ச்சியைத் தந்த அந்தப் பணிப்பை ஏற்று அமைவாக நடந்து கொண்டோம்.

வம்பர்களின் திருவிளையாடல்களால் எமது நிருவாகத்திலும் ஆட்டங் கண்டோம். முழுமையான இறை நம்பிக்கையுடன் முருகன் ஆலயத்தை நினைந்து விநாயகனைப் பிரார்த்தித்தோம். அன்றைய இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சு, சுகாதார அமைச்சு, மற்றும் அரச நிறுவனங்களுடனெல்லாம் யாம் தொடர்பு கொண்டோம். எந்த இடத்திருந்தும் எமக்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை. முயற்சிகள் எதுவும் பயனளிப்பதாக இருக்கவில்லை. இந்த வேளை பூசைகள், பிரார்த்தனைகள் என்பவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் தொல்லைகளை அனுபவித்தோம். முருகன் திருவருளால் எம் பிரார்த்தனை முயற்சி தொடர்ந்து கொண்டேயிருந்தது.

1993 ஆம் ஆண்டு தீபாவளித் திருநாள் விழாவைச் சிறப்புற நடத்தத் திட்டமிட்டோம். அன்னதானம் செய்தல், மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கல், பசு தானஞ் செய்தல் என்னுஞ் சிறப்பு நிகழ்ச்சிகளையும் இடம் பெறச் செய்தோம். இந்து சமய, கலாசார அலுவல் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகிய பலரையும் விழாவிற்கு அழைத்துக் கௌரவித்தோம். ஆலயந் தொடர்பாக நடந்தவற்றையெல்லாம் அவர்களுக்கு விளக்கம் செய்தோம். எங்கள் ஆலய வேலைகளை நிறைவு செய்து முருகனை நிறைவாகக் கண்டு வழிபட வழிகாணுங்கள் என்று அவர்களை ஒரு முகமாக வேண்டினோம். அனுமதி கிடைக்கச் செய்வதாக அவர்கள் கூறிச் சென்ற அன்றைய இரவு நடந்த

அசம்பாவிதச் செயல்களால் ஆலயம் பின்னருஞ் சேதத்திற்குள்ளாகியது. அன்று நடைபெற்ற தெய்வ நிந்தைக் கொடுஞ் செயல்கள் இன்றும் எம் உள்ளத்திற் பசுமையாக உள்ளன.

1994 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலின்போது வத்தளைத் தொகுதியிற் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடவிருந்த திரு. நீல் ரூபசிங்க அவர்கள் தேர்தலுக்கு முன் அளித்த வாக்குறுதிப்படி, தேர்தலில் வெற்றி பெற்ற உடனே அவ்வாக்குறுதியை நிறைவு செய்து தந்தார்கள். 1995 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் முருகன் அருளால் மீண்டும் திருப்பணி வேலைகள் தொடர்ந்தன. முதலில் ஆலயத்தைச் சுற்றி மதில் அமைக்குமாறும், பாதுகாப்பை வலுவடையச் செய்யுமாறும் அதன் பின் திருப்பணி வேலைகளைத் தொடருமாறும் சுகாதார அமைச்சு அறிவுறுத்தியது.

இந்த வேளை வத்தளை தெய்வ நெறிப் பொதுப் பணி மன்றம், எம்முடன் இணைந்து நின்று செயற்பட்ட, திருப்பணிகள் தொடர நல்ல மனதுடன் உடனாகி நின்றுழைத்த, ஆற்றல் நிறைந்த, இறைபணி சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற புனித நோக்குடைய இருபத்துமூவரைக் கொண்ட ஆலய பரிபாலன சபை ஒன்றை நிறுவியது. அந்தப் பரிபாலன சபையினரின் பெருமுயற்சி, ஊர்மக்கள், உள்ளூர் வெளியூர் வர்த்தகப் பெருமக்கள், மெய்யடியார்கள் என்போரது உதவியைப் பெற வைத்தது. ஆலயம் வளர்ந்தது. பொன்மனச் செல்வர்களின் மனம் நிறைந்த ஆசிகளுடன் திருப்பணி வேலைகள் நியாயமான அளவு நிறைவுகண்டன. பரிவார மூர்த்திகளுடன் அண்ணன் விநாயகன் மூல பலமாக வீற்றிருக்க வள்ளி, தேவசேனா உடனாகிய முருகன் கும்பாபிஷேகம் என்னுங் கண்கொள்ளாக் காட்சி கடந்த 1996 நொவெம்பர் இருபத்தொன்பதன்று வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தில் நடைபெற்றது. உற்சவ மூர்த்திகளாக வள்ளி, தெய்வானை உடனாக முருகன், விநாயகர், மகாலட்சுமி என்போர் உளர். கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வர ஆலயப் பிரதம குரு பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களது தலைமையிலமைந்த சிவாசாரியார்கள் கும்பாபிஷேகக் கிரியைகளை நிறைவு செய்தனர்.

*ஆலய பரிபாலன சபையினர்.*

---

*பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாவது திருநீறு. அது பசிதம், பசுமம், க்ஷாரம், இரக்ஷை என்னும் பெயர்களையும் உடையது. வெண்ணிற விபூதியே தரிக்கத் தகும். கருநிற விபூதி, செந்நிற விபூதி புகைநிற விபூதி, பொன் நிற விபூதி தரிக்கலாகாது. புது வஸ்திரத்தினாலே வடித்தெடுத்து, புதுப் பாண்டத்திலே இட்டு, மல்லிகை, முல்லை, பாதிரி, சிறுசண்பகம் முதலிய சுகந்த புஸ்பங்களை எடுத்து அதனுள் போட்டு, புதுவஸ் திரத்தால் அதன் வாயை மூடிக் கட்டி வைத்துக் கொள்ள வேண்டும். பட்டுப் பையிலேனும் சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக் கொண்டு தரிக்கலாம். வடக்கு முகமாகவேனுங் கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு விபூதியைத் தரிக்கலாம்.*

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

### வத்தளை ஹேகித்த

## அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

# அழகொளிரும் ஆலயம்

- பண்டிதர் சி. அப்புத்துரை -

அன்புள்ளங் கொண்ட அடியவரது பரிபாலனத்தில் அருள்மழை பொழியும் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தின் மூத்த காவலர் திரு. மா.ப. பாலதுரை, ஆலய பரிபாலன சபைச் செலயலாளர் திரு. மா. முத்துக்குமார் என்போரது அனுசரணையுடன் ஆலயத்தை சென்றடைகின்றோம். தேவஸ்தான நீர் கொண்டு எம்மைப் புனிதப்படுத்தி அருகே அமைந்துள்ள சிறிய சந்நிதியில் மேற்கு நோக்கிய வண்ணமிருந்து அருள்புரியும், பரமனை மதித்திடப் பங்கயாசனன் ஒரு தலை கிள்ளிய வைரவக் கடவுளைக் கண்டு மனதார அஞ்சலி செய்து, பிரதான வாயிலின் முன்னின்று வழிபாடு செய்து உள்ளே செல்கின்றோம். அங்கே கூப்பிய கரங்களுடன் நின்ற எம்மை, ஆலயத்தின் ஆரம்ப காலத்தில் நியமனம் பெற்று, இன்றும் நிறைந்த மனதுடன் முதன்மைக்குரு என்று எம் எண்ணத்திற் பதியக் கூடிய வகை பணிபுரியும் சிவஸ்ரீ இரா பாலசுப்பிரமணிய சர்மா அவர்களும் பிரதம குரு சிவஸ்ரீ சி. தியாகராஜக் குருக்கள் அவர்களும் மிகுந்த மகிழ்வுடன் வரவேற்று உள்ளே அழைத்து விநாயகனுக்கும் மூலமூர்த்திக்கும் பூசனை, தீபாராதனை செய்து, எம்மை ஆசிர்வதித்து விபூதி முதலான பிரசாதந் தருகின்றார்கள். பூசனையிலீடுபடும் சிவாசாரியார் கையிலிருந்து பெறப்படும் விபூதி பெரும் பயன் விளைக்க வல்லது என்று எங்கோ வாசித்த நினைவு. அந்த மன நிறைவோடு ஆலய பரிபாலன சபைச் செயற்குழுவினரும் நாமும் விபூதியைத் தரிக்கின்றோம். ஐயா, ஆலயம் பற்றிய சில செய்திகளை அறிமுகஞ் செய்து முழுமையாகப் பார்வையிடும்படி வழிப்படுத்துகின்றார். மக்கள் வழிபடுமிடம் என்னும் உயரிய கருத்தை மனத்துக் கொண்டு நிர்வாகத்துள் இடம் பெற்றுள்ள ஒருவர் போன்று பணிசெய்யும் சிவாசாரியர் சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய சர்மா அவர்களது உள்ளத்துயர்வை மானசீகமாக வியந்து கொண்டு தொடருகின்றோம்.

கருவறையும் முன்னுள்ள மண்டபமுமென இரண்டு மண்டபங்கள் தான் எண்ணப் படக்கூடியவை. முன்னுள்ள மண்டபத்தின் கருவறையை அண்டிய பகுதி, "எவர் சில்வர்" தகடுகளால் மூடப்பட்டு அலங்காரத்திற்குள்ளான தண்டுகள் கொண்டு புறம்பாக்கப்பட்டு, மற்றொரு மண்டபப் பிரிவு என்று எண்ணக் கூடிய வகை செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதியிலே பிரதான வாயிலுக்கு நேராக மயூரமும் பலிபீடமும் அமைந்துள்ளன. கருவறையில் நுழைதற்குரிய வாயிலின் தென்புறம் விநாயகரும், சிவலிங்கமும், வடக்குப் புறம் அம்பாளும், பாலமுருகனும் சின்னஞ்சிறிய சந்நிதிகளில் கிழக்கு நோக்கியிருந்து அருள் பாலிக்கின்றனர். உள்ளே கர்ப்பக் கிருகத்துள் வள்ளி தேவசேனை உடனாயிருந்து அருள் மழை பொழியும் முருகன் கவினார் எழில் கண்டு சொக்கி நிற்கின்றோம்.

பிரகாரத்தினூடு சுற்றிவரத் தொடங்கித் தென்கிழக்கிலுள்ள பாகசாலையைக் கடந்து தெற்கு வீதிவழி சென்று கொண்டிருக்கின்றோம். ஆலயத்தின் தென்புறச் சுவரின் வெளியே ஓங்கி வளர்ந்து குளிர் நிழலைத் தந்து கொண்டிருக்கும் ஆலமரமொன்றைப் பார்க்கின்றோம். அதன் நிழலில் முறையே ஆஞ்சனேயர், நாகபூஷணி அம்பாள்,

சந்தான கோபாலர், என்போரது சின்னஞ் சிறிய சந்நிதிகளை – ஒன்றாகத் தொடர்ந்த நிலையில் வடக்கு நோக்கியிருந்து அருளுதலைப் – பார்க்கின்றோம். கருவறையின் தென்புறச் சுவரின் வெளியே நர்த்தன கணபதியையும் தென்முகக் கடவுளாய தட்சணாமூர்த்தியையும், அடுத்து தரிசித்து வணங்கிச் செல்லுகின்றோம். கருவறையின் மேற்குச் சுவரின் வெளியே கருவறை மாடத்தில் மேற்கு நோக்கிய வாறிருந்து அருளலைச் செய்யும் பழனியாண்டவரை வழிபட்டுக் கொண்டு தொடருகின்றோம். வடமேற்கில் கிழக்கு நோக்கியிருந்து அருள் பாலிக்கும் மஹாலட்சுமியை வணங்கி அப்பாற் செல்லுகின்றோம். வடக்கு வீதியிற் கோமுகையின் பக்கமாகப் கர்ப்பகிருக மூர்த்தியை நோக்கிய வண்ணம், எமது வழிபாட்டுப் பயனைத் தருபவராகிய சண்டேசுவரர் பதியைக் கண்டு மகிழ்கின்றோம். கருவறையின் வடக்குச் சுவரின் வெளிப்புறமாக, சண்டேசுவரர் சந்நிதிக்கு முன்னாகச் சிறிதளவு கிழக்குப் புறமாகக் கருவறை மாடத்தில் துர்க்கை அம்பாள் வீற்றிரு தருள் புரிகின்றார். வடகீழ்த் திசைக்கு அண்மையாக வசந்த மண்டபத்தையும் அதற்குக் கிழக்கே சிறிதளவு தென்புறமாக நவகோள்களின் சந்நிதியையும் பார்க்கின்றோம். வடகிழக்கில் நவகோள்களின் சந்நிதிக்குத் தென் மேற்காகச் சிறியதொரு அலுவலகமும் உண்டு. நவகோள் சந்நிதிக்குக் கிழக்கே மணிக்கோபுரம் அமைந்துள்ளது.

ஆலயத்திற்கு வெளியே தெற்குப்புறத்தில் கிழக்கு மேற்காக நீண்டதொரு மண்டபம் உண்டு. இந்த மண்டபத்திலேதான் அறநெறிப் பாடசலை நடைபெறுகிறது. இதன் கிழக்கே காளியம்பாள், கருமாரியம்பாள் என்னும் தெய்வ சந்நிதிகள் சிறிய அளவிலுண்டு.

தென்புறத்துள்ள ஆலமரத்துடன் ஒரு வேம்பும் முறுகிச் செழித்து வளர்ந்திருந்ததென்றும், பின்னர் நிகழ்ந்த அநர்த்தங்களுக்கு முகங் கொடுக்க வேண்டி வந்த காலத்தில் எப்படியோ வேம்பின் வளர்ச்சி தடைப்பட்ட தென்றும், பின்னர் பட்டுப் போய் விட்டதென்றும், தெய்வ நிந்தனைச் செயல் களாற்றான் இது நிகழ்த்திருக்கலாமென்றும் அடியார்கள் மூலம் செய்திகளறிந்தோம்.

அருளாட்சிக் குரியதொரு நல்ல ஆலயத்தைத் தரிசிக்கக் கிடைத்த அருமையை – முருகன் திருவருளை – வியந்து வணங்கி வள்ளி தெய்வானை உடனாய சிவசுப்பிரமணிய சுவாமி நினைவைச் சுமந்த வண்ணம் விடைபெற்றோம்.

கால்களைக் கழுவி, ஆசமனஞ் செய்து தூலலிங்கமாகிய கோபுரத்தைத் தரிசித்து இரண்டு கைகளையும் சிரசிலே குவித்துச் சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு திருக் கோயிலின் உள்ளே போனவுடன் பலிபீடத்துக்கு இப்பால் நமஸ்காரம் பண்ணல் வேண்டும். கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலும், மேற்கு நோக்கிய சந்நிதானத்திலும் வடக்கே தலை வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும். தெற்கு நோக்கிய சந்நிதானத்திலும் வடக்கு நோக்கிய சந்நிதானத்திலும் கிழக்கே தலை வைத்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும். கிழக்கிலும் வடக்கிலும் கால் நீட்டி நமஸ்காரம் பண்ணல் ஆகாது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.



3823-- E

# சுருக்க விடை தருக

ஆண்டு - 11 — மாதினி -

1. சிவபெருமானின் ஞான வடிவம் எது?
2. ஈழத்திரு நாட்டைச் சிவபூமி எனப் போற்றியவர் யார்?
3. இராஜ ராஜேஸ்வர மகாதேவன் கோயில் எனப் போற்றப்பட்ட ஆலயம் எது?
4. திருக் கேதீஸ்வர இறைவனைப் புகழ்ந்து பாடியவர் யார்?
5. திருக்கேதீஸ்வரத் தீர்த்தத்தின் பெயர் யாது?
6. கோணேஸ்வரத்தில் உறையும் இறைவி பெயர் என்ன?
7. கோணேஸ்வரர் தீர்த்தத்தின் பெயர் யாது?
8. அளகேஸ்வரம் என்று அழைக்கப்படும் ஆலயம் எது?
9. பக்தோற்வச விழாவில் சிறப்பாக எழுந்தருளும் விக்கிரகங்கள் யாவை?
10. பக்தோற்சவம் நடை பெறும் ஆலயம் எது?
11. இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள ஈஸ்வரம் எது?
12. நகுலகிரி தீர்த்தத்தின் சிறப்பு யாது?
13. தான் தோன்றி ஈஸ்வரங்கள் அமைந்துள்ள இடங்கள் எவை?
14. ஒட்டு சுட்டான் தான்தோன்றி ஈஸ்வரர் ஆலய இறைவி பெயர் யாது?
15. கொக்கட்டிச் சோலை தான் தோன்றி ஈஸ்வரர் ஆலய பரிபாலகர் எவ்வாறு அழைக்கப்படுவர்?


வத்தளை ஹேகித்த

அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்

சிவாசாரியர்

பிரதம குரு:
குருமணி, ஈஸானசிவாசாரியார்
சிவ ஸ்ரீ சி. தியாகராஜக் குருக்கள்

சிவ ஸ்ரீ இரா. பாலசுப்பிரமணிய சர்மா
சிவ ஸ்ரீ வ. ஞானசேகர சர்மா

ஆலய ஓதுவார் திரு S.V.R. பெருமாள்

யாழ்ப்பாணம், நல்லூர்

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின்

## உபதேசம்

சைவ சமயம் உலகிலுள்ள பல்வேறு சமயங்களை விட மிகச் சிறந்தது. தொன்மை வாய்ந்தது. எல்லாச் சமய உண்மைகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டு வியாபகமாக உள்ள சிறப்புடையது. சீவகாருண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒரு சமயம் இச் சைவசமயம் மிக உன்னத நிலையில் இருந்து விளங்கியது. பிறகு ஒருகாலை கொஞ்சம் குன்றியது. அப்போது எல்லாம் வல்ல பரமேசுவரன் திருவருளால் நால்வர் பெருமக்கள் நிலவுலகில் தோன்றினார்கள். சைவ சமயத்தைப் பரப்பினார்கள். மக்கள் பயனடைந்தனர். சைவம் தலைதூக்கி நின்று நிலவி வந்தது. மறுபடியும் சைவத்தின் நிலைமை காலப்போக்கில் குன்றத் தொடங்கியது.

இறைவன், இச் சங்கடமான நிலையில் யாழ்ப்பாணம், நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களை யனுப்பிச் சைவத்தின் பழஞ் சிறப்பு மீண்டும் மிளிரச் செய்தருளினார்.

இவர்கள் நல்லுபதேசம் உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் சிறப்பாக, சைவர்களுக்கு மிக மிகப் பயனைத் தந்தது.

1. சிவ சின்னங்களாகிய விபூதி, உருத்திராக்கங்களை அணிந்து கொண்டு திகழுதல்.
2. குறைந்த பட்சம் சமயதீக்கையாவது, மக்கள் தக்க ஆசாரியரை அடுத்து, பெற்றுக் கொண்டு உயிர்களுக்கு உய்வைத் தரும் திருவைந்தெழுத்தை விதிப்படி எண்ணுதல்.
3. சைவர்கள் நல்லொழுக்கத்துடன் வாழ்ந்து, மரக்கறி யுணவையே மேற்கொண்டு விளங்குதல்.
4. பொய், கொலை, களவு, காமம் முதலியவற்றை அவசியம் விட்டு, நல்வாழ்வு வாழ்தல்.
5. உயிர்களுக்கு உறுதியளிக்கும் தேவார, திருமுறைகளைப் பூசித்து நேசித்துப் பக்தி சிரத்தையுடனும் அழுத்தமான நம்பிக்கையுடனும் படனம் செய்து வருதல்.
6. நால்வர் பெருமக்களுக்கு ஆலயங்கள் எழுப்பி அவர்களை நாடோறும் பூசை முதலியன செய்வித்தல்.
7. பன்னிருதிருமுறைக் கோயிலை ஒவ்வொரு சிவாலயத்திலும் ஸ்ரீ நடேசப் பெருமான் சந்நிதியில் பிரதிட்டை செய்தல். பூசை செய்வித்தல்.
8. தக்க ஆசாரியரை அடுத்து விசேட தீட்சை பெற்றுக் கொண்டு, சைவர்கள் பிரமாண நூல்களான பதினான்கு சித்தாந்த சாத்திரங்களை முறைபாக ஐயம் திரிபு இன்றி நல்ல முறையில் கற்றுக் கேட்டுச் சிந்தித்து இறையருள் பெறுதல்.
9. சைவம் பரவாமல் உள்ள இடங்களில் எல்லாம் சபைகளையும் சங்கங்களையும் நிறுவி, சைவ மக்கள் ஒன்று சேர்ந்து திருமுறைகளை ஓதவும், சாத்திரம் கேட்கவும் ஏற்பாடு செய்தல்.
10. சிறப்பாகச் சைவர்கள் அனைவரும் ஒன்றுபட்டுச் சைவத்தின் சிறப்பிலக்கணமாகிய தாழ் வெனும் தன்மையுடன் வாழ்தல் வேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் சைவர்களுக்குள் அபிப்பிராயபேதமோ, ஆணவமோ ஏற்பட்டால் இறைபருளால் அவற்றைச் சரி செய்து கொண்டு தூய்மையான நல்வாழ்வு வாழ்ந்து இகபர சௌபாக்கியங்களைப் பெற்று பிறகு இறையடியில் அநுபவிக்கும் பேரானந்தப் பெருவாழ்வைப் பெறுவது.

*இன்னோரன்ன பிற.*

*'மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்"*

*காயப்பாக்கம் – சோசுந்தரம்.*

*25.6.69*



3823 - E

# புவியிலே தோன்றிய தன்னிகரிலாத்தலைவன்

*"நிலவுலகி லொருமதியம் நிலவியதென் றேநிகழ்த்தப்*
*பலகலையும் நிரம்பியாழ்ப் பாணமெனும் பாற்கடலில்*
*இலகியெழிஇ நாவலரென் றியம்புபெய ரெவர்பெறினுங்*
*குலவுதமை பேகுறிக்கக் கொண்டபெருங் குலப்புகழார்."*

சற்சமயமாகிய சைவ சமயத்தையுஞ் செந்தமிழையும் நன்கு வளர்த்து அழியாத நிலையான புகழைப் பெற்றுத் தந்தவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் ஆவர். நமது சமயக் காவலர்.

போதனையாலும் சாதனையாலும் சைவத்தையும் தமிழையும் வளர்த்தவர். அவற்றிற்காகத் தமது உடல், பொருள், ஆவி அனைத்தையுமே அர்ப்பணஞ் செய்தவர்.

முன்னாளிற் பிற மதங்கள் தலைதூக்கி நின்று சைவங் குன்றிய காலத்திற் சம்பந்தப் பெருமான் முதலான சமய குரவர்கள் தோன்றிப் பிற மதங்களின் வீறடக்கிச் சைவத்தை நிலைநிறுத்தினர்.

பின்னர்ப் பத்தொன்பதாம் நூற்றாண்டிற் கிறீஸ்தவர்களின் சூழ்ச்சிகளினாலே சைவம் நிலை தளர்ந்த காலத்து நாவலர் பெருமான் நம்முன் தோன்றியுள்ளார்.

அவநெறியாயவை எவையோ அவை யாவற்றையும் முற்றக்களைந்து, சிவநெறி வளர்த்த திப்பிய குணத்தவர் நாவலர் ஒருவரேயன்றி அவரின் முன்னாவது பின்னாவது வேறெருவருமிலர். பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப் போல ஒருவருமில்லை.

இறுதியாக ஒன்று: சைவமென்னுந் தாமரையை யலர்த்தப் புவியிற் தோன்றிய தன்னகரில்லாத் தபனன் நாவலரே யாவர்.

சைவ சமய சாத்திர நூல்களை மரபு தவறாது நன்கு கற்றுத் தெளிந்து அவற்றில் நம்பிக்கை விசுவாசங் கொண்டோரும், அவ்வாறு கற்றுத் தேறியவரை வழிபடுவோருமாகிய இரு சாராருமே சைவத் தமிழ்த் தொண்டுக்கு உரியவராவர்.

*திருமுறைக் கழகம், சித்தங்கேணி*
*27.06.1969*

# மாறிலா மாக்கருணை வெள்ளம்

முருக வே. பரமநாதன்

தெய்வீகம் வெளிப்படும் பிறவி மானுடம் என்பர். அஃதே போல ஆத்மீகம் மனிதவாழ்வின் உயர் நெறி எனவும் எழுதுகின்றனர், பேசுகின்றனர். இந்தத் தெய்வத் தன்மையின் வெளிப்பாடே அவதாரம். இந்த நெறியாள்கை எல்லாம் மனித வர்க்கத்திடம் இருந்தே விகசித்தது. ஆயினும் மனிதன் மனிதம் திகழ வாழ்கிறானா? எப்படி வாழக் கூடாதென்பதை வாழ்ந்து காட்டுகிறானா? தெய்வீகம், ஆன்மீகம் என்பன வெறும் எழுத்தா, பேச்சா, அன்றேல் வெளிக்காட்சியா! எந்த ஒரு கருமமும் செயலாக்கம் பெறவேண்டும். ஆளுமைமிக்க மனிதன் தன் இலக்கை அடைய தகுதியாகிறான். எனவே வாழ் தகைமை உடையவன் மனிதன். இதை வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே எனத் திருவாசகம் கூறும். நாம் வாழ்கிறோமா? வாழ முயல்கிறோமா? இதுவும் வாழ்வா? என்று அலுத்துப் போனதும் உண்டு. காயமே இது மெய்யடா – என எம்மை நிதானப்படுத்த வேண்டும். உடம்பு உயிரின் உறைகலம். ஆதலின் உடம்பை உறுதி செய் என்றார் பாரதி. நோய் வராமற் பேண வேண்டும். நோய் வந்தால் வைத்தியம் பார்த்து பத்தியபாகம் பேணவும் வேண்டும். எனவே வருமுன்னர் காக்க வேண்டும். வாழ்வு மையம் பிரபஞ்சத்தோடொட்டிய உலகியலையும் தாண்டி உயிரியலோடு ஒட்டி உறவாடும் உளவியலோடு கலந்த திவ்ய மார்க்கம். இதன் நடுப்புள்ளி நீதி. மனித இயல், நெறி, சமயம், உலகம் என்பன போன்ற பல அம்சங்கள் ஒருங்கிணைந்ததே மனித வாழ்வு. எனவே மனிதம் புனிதமாக வேண்டின், வாழ்வியலின் ஒவ்வொரு அணுப்பிரமாணமும் செவ்விதாய் அமைய வேண்டும். அப்போதான் மனிதவிழுமியங்கள் நிலைத்து வாழ்க்கை மேம்படும்.

எனவே "பக்தியுடையார் காரியத்திற்பதறார் வித்துமுளைக்கும் தன்மை போல் மெள்ளச் செய்து பயனடைவார்" என்ற பாரதியின் வாக்குக்கமைய நம்மை வழிப்படுத்தவும் வேண்டும்.

இன்று வளர்ந்து வரும் வன்முறைக் கலாசாரத்திற்கான காரணிகளில் ஒழுக்கம் பேணப்படாமையும் ஒன்று என ஆய்வாளர் கருதுகின்றனர். நேரிய ஒழுகலாற்றைச் சமயம் பல தசாப்தங்களாகப் பேணி வளர்க்கத் தவறவில்லை. இன்றைய பாலியல் வன்முறைகளின் அடிப்படைக்குத் தாய்மை, சகோதரத்துவம் போன்ற பண்புகள் வற்றியமையும், தொலைத் தொடர்புச் சாதனங்களும், விஞ்ஞான ரீதியில் மக்கள் உறவாடும் சமூக இயலும், ஒழுங்கும், ஒழுக்கமும் நெகிழ்ந்தமையும் காரணிகள் ஆகலாம். எச்சமயமும் மனிதன் மனித நேயம் பூத்து வாழ வேண்டுமென்றே முயல்கின்றன. ஒவ்வொரு மனிதனும் சிறந்த சமயியாக, சமுதாயியாக மாற வேண்டும். சைவம் உறுதுணையாக வேண்டும். ஆக நம் சைவசமயம் சிறந்த ஸ்தாபன ரீதியில் இயங்கி உலகெங்கும் வாழும் சைவசமயத்தவரை நெறிப்படுத்த வேண்டும். நீதியே வடிவான இறைவனை வழிபாடு செய்யும் மனிதர்கள் தம்மை நீதி நெறிக்கு ஆற்றுப்படுத்த வேண்டும். அன்றேல் ஆறறிவில் ஒன்று குறைவு எனவே கணிக்கப்படுவர். சிலபோது எஞ்சிய ஐந்தறிவு கூட குடிபோன நிலையில் பலர் வாழ்கின்றனர். தொல்காப்பியர் அவர்களை விலங்கு வரிசையிலே தான் வைத்துப் பார்த்தார்.

இன்றைய கோட்பாடும், கருதுகோளும் விஞ்ஞானக் கண்ணோட்டத்திலேயே கணிக்கப்



3823 - E

படுகின்றன. இன்று மின்கணனித்துறை எவ்வளவு மக்களை இணைத்து வைத்திருக்கிறது. இதனால் மெய்ஞான வழி உதாசீனம் பெறக் காணலாம். எனினும் தெய்வ உணர்வுகள் விட்டுப் போகவில்லை எனலாம். இந்நிலையிலே நீதி குணமான இறை நினைப்பு நம்மைப் பல துறைகளிற் பேணிப் பாதுகாக்கின்றது. இதை மணிவாசகர் மனம் உணர்ந்து பாடுகிறார்.

*"மாதிவர் பாகன் மறைபயின்ற வாசகன்*
*மாமலர் மேயசோதி*
*கோதில் பரங்கரு ணையடியார் குலாவு*
*நீதிகுண மாகநல்கும்*
*போதலர் சோலைப் பெருந்துறையெம் புண்ணியன்*
*மண்ணிடை வந்திழிந்*
*தாதிப் பிரமம் வெளிப்படுத்த அருளறி*
*வார்எம் பிரானாவாரே"*

*திருவாசகம் – திருவார்த்தை –1*

எந்நிலையிலும் மனிதப் பிறவி புனிதமானது எனச் சிலாகித்தால் மட்டும் அமையாது. புனிதம் மனிதனின் ஆளுமையாகப் பளிச்சிட வேண்டும். அங்கே தான் இறைமயம் சிவமயமாய்த் தானே வந்து குடிகொள்ளும். பழங்குடில்தொறும் எழுந்தருளும் பராபரனின் அருள் நாட்டம் கருணை மழையாகி வெள்ளப் பெருக்கெடுத்தோடும் என்பர் வாதவூர்ப் பெருமான்.

*"மாறி லாதமாக் கருணை வெள்ளமே*
*வந்து முந்திநின் மலர்கொள் தாளிணை*
*வேறி லாப்பதப் பரிசு பெற்றநின்*
*மெய்ம்மை அன்பருன் மெய்ம்மை மேவினார்*
*ஈறி லாதநீ எளியை யாகிவந்*
*தொளிசெய் மானுட மாகநோக்கியும்*
*கீறி லாதநெஞ் சுடைய நாயினேன்*
*கடையன் ஆயினேன் பட்டகீழ்மையே"*

*திருச்சதகம் – 91*

இப்பாடலிலே மானுடச் சட்டை தாங்கிவந்து அருள் பாலிக்கும் இறைவனைக் கருணாகரனாகக் காட்டும் திறன் எம்மை ஈர்க்கிறது. கருணையை எடுத்துக் கூறும் பாங்கில் கருணை வெள்ளமே, மாக்கருணை வெள்ளமே, மாறிலாத மாக்கருணை, மாக்கருணை என்னும் தொடர்கள் பாடலிலே அமைந்துள்ளன. அவனுடைய கருணைப்பாவம் என்றும் ஒரு தன்மைத்தாய் இருக்குமென்பதை மாறிலாத என்னும் பிரயோகம் உறுத்திக் காட்டுகிறது. எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல் கருணையின் அருட்பிரவாகம் எம்மாறுதலும் அடைவதில்லை. ஆக மாறிலாத மாக்கருணை வெள்ளமே என விழித்துப் பேசும் இத்திருவாசகம் மட்டும் அல்ல பல கவிதா சாலம் இறைவனை கருணையின் வடிவமாக வர்ணித்தமை வாசகத்தைப் படிப்போரை உருக வைக்கிறது, உருக்குகிறது எனலாம். இந்த உருக்கும் பண்புதான் வாதவூரடிகளின் திருவாக்கின் ஜீவநாடி, உயிர்ப்பு, உறைவிடம் எனலாம். வேறெந்தப் பக்திப்பிரபந்தமும் செய்யாத வேலையைத்திருவாசகம் செய்கிறது. கருணாலயன், கருணாகரன், கருணாநிதி என்னும் பிரயோகங்கள் நெஞ்சைக் கொள்ளை கொள்கின்றன. இந்நெறியிற் சுவாமிகள் காட்டும் சிவ கருணைப்பாவங்களைச் சற்றுக் கவனிப்பாம்.

*கருணை வான் தேன் கலக்க*
*அருளொடு பராவமுது ஆக்கினன்*
*பிரமன்மால் அறியாப் பெற்றியோனே –*

*திருவண்டப்பகுதி 180 – 183*

*தாட் டாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி*

*திருவம்மானை – 6*

திருவாசகத்தேன் இறைவனையும் அவன் கருணையையும் தித்திக்கும் தேனாகக் காட்டிற்று. மேற்பாடலடிகளில் கருணைத் தேனின் செவ்வி பேசும்திறன் நெஞ்சிலும், நாவிலும், உயிரிலும், தெவிட்டாது இனிக்கிறது எனலாம். இறைவனைக் கருணாலயன் எனப்புணர்ச்சிப் பத்திலே வருகிறது.

வத்தளை ஹேகித்த
அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி
தேவஸ்தானம்
ஆலய பரிபாலன சபைச் செயற்குழு

காப்பாளர்

1. திரு. மா.ப. பாலதுரை
2. திரு. ஆ. முத்தையா
3. திரு. இ. கந்தசாமி
4. திரு. க. தமிழ்வாணன்
5. திரு. பொன். சண்முகராஜா

1. தலைவர் : திரு. ரவி சிவகுமார்
2. பொதுச் செயலாளர் : திரு மா. முத்துக்குமார்
3. பொருளாளர் : திரு. மு. சண்முகவேல்
4. உப தலைவர் : திரு. ம. சுப்பிரமணியம்
5. உப செயலாளர் : திரு. க. கணேசன்
6. உப பொருளாளர் : திரு. செ. ஆறுமுகம்

7. திரு. ச. மா. ஜெயக்குமார்
8. திரு. சி. நடராஜா
9. திரு. வே. ஜெயராஜ்
10. திரு. பொன். நவராஜ்
11. திரு. சி. ரவிச்சந்திரன்
12. திரு. க. பூவலிங்கம்
13. திரு.பி. சிவலிங்கம்
14. திரு. க. சந்திரன்
15. திரு. மு. இரத்தினம்
16. திரு. வே. சுப்பிரமணியம்
17. திரு. என் வீரையா
18. திரு. மு. பாலசுப்பிரமணியம்

*சுடர்பொற் குன்றைத் தோளா முத்தை*
*வாளா தொழும்பு கந்து*
*கடைபட்டேனை ஆண்டு கொண்ட*
*கருணாலயனைக் கருமால் பிரமன்*
*தடைபட் டின்னுஞ் சார மாட்டாத்*
*தன்னைத் தந்தான் ஆரமுதைப்*
*புடைபட்டிருப்ப தென்று கொல்லோ என்*
*பொல்லா மணியைப் புணர்ந்தே*

*புணர்ச்சிப்பத்து*

விபீஷணன் இராமனைமுதன்முதற்கண்ட காட்சியை கருணை என்னும் கோயிலிற்குடி கொண்ட கண்ணனைக் கண்டான் எனக்கம்பர் வியந்து பாடினார். இராமாவதார மகிமை கண்ணனேதான் என்று பல இடங்களில் இராம காவியம் பேசா நிற்கும். தாயுமானவர் நடராஜப் பெருமானைக் கருணாகரக் கடவுளே எனத் தன் நாநிறையப்பாடினார்.வழிவழி வள்ளலாரும் பாடினார்.

*அருட் பெருஞ்சோதி – தனிப்பெருங்கருணை (தனி – ஒப்பற்ற)*
*காய்பலாம் கனியெனக் கனிவிக்கும் ஒரு பெருங்கருணை அமுதே*
*கண்கண்ட தெய்வமே கலிகண்ட அற்புதக்காட்சியே*

*திருஅருட்பா.*

இறைவனது சடா பாரத்தமைந்த கங்கையைக் கருணை வெள்ளத்தின் அடையாள மெனக்கவிமணி பாடினார். அங்கே தாணு (சிவன்) மால் அயன்குடி கொண்டுள்ளனர். இலிங்கோற்பவரிலும் மூவரை நாம் வணங்குகிறோம். சுசிந்தை சுசீந்திரம் (கன்னியா குமரிப்பாடற்றலம்)

*கங்கைநின் கருணை காட்டும் கழுவும் நின் ஆண்மை காட்டும்*
*சிங்கநுண் இடையைக் காட்டச் சிறையனம் நடையைக் காட்டும்*
*மங்கையோர் பாகா தாணுமா லயா சுசிந்தை வாழ்வே*

*மலரும் மாலையும்.*

# முருக பக்தி மேம்பாடு

பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்
- பிரதம சிவாசாரியார், பொன்னம்பலவாணேசுவரர் ஆலயம்-

"வேல் உண்டு வினை இல்லை என்ற பெருநோக்கில் அடியார் முருகளை வழிபடுகின்றனர். பழவினையை நீக்குவதில் முருகன் சிறந்தவன். சிவனை வழிபட்டு மாபெரும் வரங்களைப் பெற்ற சூரபதுமன் என்ற அசுரன் ஆணவ மேலீட்டால் அக்கிரம ஆட்சி நடத்தித் தேவர்களை வருத்தினான். தேவர்களின் துன்பத்தை நீக்கச் சிவபிரான் தனது அம்சமாக முருகனைத் தோற்றுவித்தார். முருகனும் அசுரரும் யுத்தம் நடத்தினர். முருகன் சூரனுக்கு நல்ல நிலையைக் கொடுத்தான். உடனே முருகனை மேலானவனாகப் பணிந்து வணங்கினான் சூரன். வணங்குபவனைக் கொல்லக் கூடாது எனவே ஆணவமலம் தலைக்கேறிய அவனை வேலால் பிளந்தான். பிளந்த இரு கூறும் சேவலும் மயிலுமாயின. அவன் செய்த தவத்தின் பயனாய் அவனை ஆட் கொள்ள மயில் வாகனமாகவும் கோழியைக் கொடியாகவும் தாங்கினார். முருகனை வழிபட்டால் வினைபோகும்; பேரின்ப வாழ்வுண்டாகும் என்பதையே கந்தபுராணம் விளக்குகின்றது. சூரனை அழித்த வேல் சக்தி வேல் ஆகும். அம்பாள் கரத்தால் ஆசியுடன் அன்போடு முருகனுக்கு வழங்கிய வேலாகும். முருக வழிபாடு வேலைத் தாங்கிச் சக்திகளுடனான முருகனையும், தனிவேலையும் கொண்டதாக உள்ளது.

ஹேகித்த ஸ்ரீமுருகன் ஆலயத்தின் மூலஸ்தானத்தில் எழுந்தருளியுள்ள அம்பாளுடன் வேலைத்திருகரத்தில் தாங்கி எழுந்தருளியுள்ள முருகனின் அழகே தனிஅழகு எனலாம். இந்த முருகனைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம். இந்த ஆலய முருகனைத் தருசிக்க அலை அலையாக வரும் பக்தர் குழாத்துக்கு முருகன் அருளை எப்பொழுதும் வழங்கிய வண்ணம் உள்ளான். முன்னர் சிற்றாலயமாக இருந்த இந்த ஆலயம் இப்பொழுது பேராலயமாக விளங்குகின்றது இங்கு கார்த்திகைச் ஷஷ்டி, வெள்ளிக்கிழமை தைப்பூசம் வைகாசி விசாகம் போன்ற விரத நாள்களில் விவேஷ அபிஷேகம் பூசை உற்சவம் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன.

இலங்கையிற் கந்தபுராண கலாச்சாரம் நன்கு வளர்ந்து செழிப்புற்றுள்ளது. அந்த வகையிலான கந்தபுராணபடனம் இங்கு படிக்கப்பட்டு வருவதால் பௌராணிக வாழ்வுக்கு இது வழிவகுக் கின்றதெனலாம்.

அறநெறிப் பாடசாலை மூலம் சிறார்களுக்குப் பக்தியையும் அறநெறிக் கல்வியையும் கொடுத்து அவர்களைப் பக்தி மார்க்கவழி இட்டுச் செல்கின்றனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்த ஆலயத்திற்கு ஒரு சிறப்பம்சம் உளது. யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி முருகன் அன்னதானக் கந்தன் எனப் பெரும் புகழ் வாய்ந்தவன். அஃதேபோன்று இங்கேயும் எந்த விழா எடுத்தாலும் அன்னதானம் எப்பொழுதும் நடைபெறுவது சிறப்பம்சமாகும்.

மனத்தாலும் வாயாலும் முருகனை வாழ்த்தி வழிபாடும் அடியார்கள் வயிறார உண்டு இல்லம் ஏகும் பாங்கு மிகவும் சிறப்பானது. கூட்டு வாழ்க்கை ஒற்றுமை வாழ்க்கைக்கு நெறியாகவும் உள்ளது.

சகலதுறைகளிலும் சிறப்பாக விளங்கும் ஹேகித்த முருகன் ஆலய வருஷாபிஷேக (மணவாளக் கோல) விழாவைச் சிறப்பாக நடத்தும் இவ்வேளையில் முருகன் அருள் எல்லோருக்கும் கிட்ட வேண்டும்; எல்லோரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என ஸ்ரீசிவகாமி அம்பிகாசமேத ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரப் பெருமானை வேண்டி எனது நல்லாசிகளை நல்குகின்றேன்.

*"குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.!*

# காந்தமலை

- வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் ஜே.பி. -

*அந்திப்போ தழகுறவே நடித்தருளும் வழித்துணைவர் அருளுங் கோவை*
*வந்திப்போர் நினைத்தபடி மயிலேறி அயிலெடுத்து வருஞ்செல்வேளைச்*
*சந்திப்போம் மலர்சொரிவோம் புகழ்ந்திடுவோம் அவன்கமலத் தாளும் தோளும்*
*சிந்திப்போம் ஆதலினால் நமதுபழ வினைகளெல்லாம் சிந்திப்போமே*

என்று அழகாகவும், ஆணித்தரமாகவும், திருவிரிஞ்சைப் புராணம் கூறுகின்றது. கந்தனை சிந்தித்தால் வினைகள் சிந்தும். வேலவனை வணங்கினால் வினைகள் வேரறும். வழிக்கும், விழிக்கும், மொழிக்கும், துணையாக நிற்பவன் முருகப்பெருமான். காக்கும் எழுத்தாகிய உலகத்தையே தனது நாமமாகக் கொண்டு விளங்குபவன். கடவுள் உணர்ச்சியில் கால் ஊன்றாதவர்கள் கூட இன்று உடலெல்லாம் வேல் குத்தி வேண்டிநிற்கின்றார்கள். காவடி எடுத்துக் கந்தப்பெருமானை வலம் வருகின்றனர்.

"முருகு" என்பது பலபொருள் குறித்த ஒருசொல். கள், எலுமிச்சை, பூந்தட்டு, மணம், அழகு, இளமை இப்படிக்கூறிக் கொண்டே செல்லலாம். முருகு என்ற பண்பு பலமணிகளையும் இணைக்கும் நூல்போன்றது. கண் வழியாகச் சென்று கருத்திற்குள் புகுவதோடல்லாமல் புலன்கள் வழியாகச் சென்று புந்திக்குள் உறையும் அழகே அழியா அழகு. ஐம்புலன்களால் ஆர நுகரப்படுவது. உயர்ந்த பண்புகளின் உறைவிடமாக விளங்குவது. இத்தகைய உயர்ந்த தலைமைப் பண்புகள் சிறப்புக்கள் அனைத்திற்கும் இருப்பிடம் முருகப்பெருமானே'.

கண்ணிற்கு அழகாக, காதிற்கு நாதமாக, மூக்கிற்கு மணமாக, உடலிற்கு ஊற்றின்பமாக, கருத்திற்கு விருந்தாக, உயிரில் உணர்வாக விளங்குபவனே அந்த வேற்பெருமான். தொன்மையைப் பற்றி எண்ணும் பொழுதே நமது மனத்திரையில் நிழலாடுவது மலையே. "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடிக்குச் சொந்தக் காரன் முருகனே" மனித வாழ்க்கையின் முதிர்ந்த அறிவுநிலை கடவுட்கொள்கை. அக்கடவுட் கொள்கையில் முதலில் தோன்றியது, இயற்கை வழிபாட்டுடன் இரண்டறக் கலந்தது முருக வழிபாடு. மலையுறையும் தெய்வமே தமிழன் கண்ட முதல்தெய்வம்.

கந்தக் கடவுள் கலியின் கொடுமையைத் தணிக்கும் தெய்வம். வந்தவினையும் வருகின்ற வல்வினையும் கந்தன் என்று சொல்லக் கலங்கும். கோள்களின் நிலை, அடியவர்களுக்குச் சாதகமாகும் என்று கூறுகின்ற "கோளறு பதிகம்" தேவாரத்தில் மட்டுமல்ல கந்தரந்தாதியிலும் உள்ளது.

ஆறுமுகப் பெருமான்மீது அருணை முனிவர் அருளிச் செய்த அருள் நூல்கள் ஆறு உண்டு. 'திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரநூபூதி, கந்தரந்தாதி, வேல், மயில் விருத்தங்கள் எனப்படுபவை அவை. அதில் கந்தரந்தாதி பற்றி, கற்றவர்கள் கூட அதிகம் அறிந்ததில்லை. காரணம் அதன் கடினத் தன்மையே! கடினமான கற்பாறையை உடைத்தால்தான் கரும்பனைய தண்ணீரைச் சுவைக்க முடியும். கரடுமுரடான கற்கண்டைக் கடித்தாற்றான் அதன் இனியசுவையைத் துய்க்க முடியும். அதுபோலத்தான் கந்தரந்தாதி என்ற நூலும். அதற்குள்ளே சென்று விட்டால் அதைப்போன்ற பொருளாழம் படைத்த நூல் வேறொன்றுமில்லை என்று திண்ணமாகக் கூறலாம். கடலின் அடியிலே சென்றால் முத்துக்கள் கிடைக்கும். கரையிலே நின்றாற் சிப்பிகள் தான் கிடைக்கும்.

கந்தரந்தாதியைப் பற்றிய ஒரு சுவையான செவிவழிச்செய்தி; வில்லிபுத்தூர் ஆழ்வார் சிறந்த புலமை உடையவர். மகாபாரதத்தைத் தமிழில் பாடியவர். ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். ஆனால் புலமைச் செருக்குடையவர். புலவர்களை வாதுக்கழைத்துத் தன்னிடம் தோற்றவர்களின் காதினை அறுத்துவிடுவார். பல புலவர்கள் இவரிடம் தோற்றுச் செவியறுபட்டனர். ஒருமுறை அருணகிரி நாதருக்கும் வில்லிபுத்தூரருக்கும் தர்க்கம் ஏற்பட்டது. அப்பொழுது அருணகிரிநாதர் செந்தமிழ்த் தெய்வத்தின் அருளால் ஆசுகவியாகக் கந்தரந்தாதி பாடப்பாட வில்லிபுத்தூரார் கடல்மடை திறந்தாற் போலத் தங்குதடையின்றிப் பொருள்கூறி வந்தார். 53 செய்யுள்கள் கடந்துவிட்டன. 54ம் பாடல்

*திதத் தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா*
*திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா*
*திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து*
*திதத்தத்தத் தித்தித்தி தீதீ தித்துதி தீதொத்ததே"*

என்று பாட வில்லிபுத்தூரருக்குப் பொருள் கூறமுடியவில்லை. திகைத்துத் திணறித் தன்தோல்வியை ஒப்புக்கொண்டு இதுநாள்வரை பலரது செவியையும் அறுத்தெறிந்த குறட்டால் தனது செவியைத் தானே அறுத்தெறிய முற்பட, அருணகிரிநாதர் தடுத்து இச்செயல் கருணைக்கு விரோதமானது என்று எடுத்துக் கூறி, குறட்டையும் எறியச் செய்தார். வாக்கிற்கு அருணகிரி மட்டுமல்ல கருணைக்கும் அருணகிரிதான்.

போட்டியிட்டுப் பாடப்பட்ட நூலாதலால் எளிதில் பொருள் காணமுடியாது. அதனாலேதான் ''கந்தரந்தாதியைப் பாராதே. கழுக்குன்றத்து மாலையை நினையாதே'' என்ற ஒரு தொடரும் எழுந்தது.

கொழும்பு ஹேகித்த நகரிலே, அருணகிரி நாதருக்கு அருள் செய்த அழகுத் தெய்வம், வினைகளை ஈடழிக்கும் வேல்கொண்ட தெய்வம் அற்றார்க்கும், அலந்தார்க்கும் அருள் செய்யும் ஆறுமுகத் தெய்வம் தந்தைக்கே ஓமெனும் ஒண்பொருளின் உபதேசப் பொருள் உரைத்த உயர் தெய்வம் சிவசுப்பிரமணியனாக அருட் காட்சி வழங்குகின்றான். காண்பவர்களைச் சுண்டியிழுக்கும் கரைகாணாப் பேரெழிலுடன் அன்னையர் இருவர் புடைசூழக் கருவறையிற் காட்சி தருகின்றான். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இக்கோயிலைப் பற்றி அநேகர் அறிந்திருக்க மாட்டார்கள். ஹேகித்த தொழுநோயாளர்கள் மருத்துவ மனையின் ஒரு பகுதியாக விளங்கி வந்தது இந்த ஆலயம். திரு.ரவி சிவகுமார் போன்ற உள்ளத்தில் வீறுடைய ஆன்மாக்கள் பல இணைந்த முயற்சியால் இந்த ஆலயம் பொறுப்பேற்கப்பட்டு அறநிலைக் குழுவினரின் ஆளுகைக்குள் வந்தது. ஆலயம் திருத்தியமைக்கப்பெற்றது. புது மெருகுடன் பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களின் திருக்கரங்களாற் குடமுழுக்குச் செய்விக்கப் பெற்றது. அபிஷேகங்களும், ஆராதனைகளும் பெருகின. எத்துணையோ, அச்சுறுத்தும் இடர்ப்பாடுகளின் மத்தியிலும் தொண்டுகள் தொடர்ந்தன. சிவராத்திரி, நவராத்திரி, கந்த ஷஷ்டி, திருவெம்பாவை விழாக்கள் கோலாகலமாய் நடைபெற்றன. அர்ச்சகருக்கு இல்லம், அறநெறிப்பாடசாலை எனத் திட்டம் விரிவடைந்தது. மதமாற்றம் என்னும் அலகை வாயைப் பிளந்து விழுங்கக் காத்திருக்கும் நிலையில் சமயச் சொற்பொழிவுகள் சிறார்களுக்கான சமயபோதனை, சமயக் கருத்தரங்குகள், ஆலய சபையோரால் முன்னெடுத்துச் செல்லப்பட்டன. தேர்த்திருவிழா இம்முறை வத்தளை வீதியெங்கணும் முரசு கொட்டியது.

இன்று ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயம் என்றால் அறியாதார் யாரும் இருக்கமாட்டார்கள். ஆறுபடை வீட்டுடன் ஏழாவது படைவீடாக இத்தலம் எதிர்காலத்தில் சிறக்கும். இத்துணை சிறப்புக்களுக்கும் காரணம் தன்னை நாடி வரும் பக்தர்களையெல்லாம் காந்தமலையெனக் கவர்ந்திழுக்கும் கந்தப் பெருமானின் திருவருளே என்றால் அதனை மறுப்பார் யார்?.

# விபூதியின்பெருமை

- மா. ப. பாலதுரை -
"ஹேகித்த, வத்தளை

வி + நாயகர் என்று பிரிக்கப்பட்டுத் தனக்கு மேல் ஒருதலைவர் இல்லாதவர் என்று விநாயகனை நாம் அறிந்து கொள்கின்றோம். அந்த வகையில் விபூதி என்பதையும் யாம் சிந்திக்கலாம். விபூதி = வி + பூதி என்று பிரிக்கப்படலாம். பூதி என்பது செல்வம் என்று பொருள் தரும். எனவே விபூதி என்பது மேலான செல்வம் என்று பொருள்படும். அது தனக்கு மேல் ஒரு செல்வம் இல்லாதது என்னும் பொருளைத் தன்னகத்துக் கொண்டது. அதாவது செல்வத்துட் செல்வம் என்று சிந்திக்கப்பட வேண்டியது.

பாண்டிய மன்னன் திருஞானசம்பந்தரிடம் பெற்ற திருநீற்றின் மூலம் பிணி நீங்கப் பெற்றான் என்பது எல்லாரும் அறிந்தது. இதே உண்மையை, வருடத்திற்கு ஒரு பாடலாக மூவாயிரம் பாடல்களில் வேதசாரத்தை – சித்தாந்தத் தகவல்களைத் தந்த திருமூலர்.

*கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை*
*மங்காமற் பூசி மகிழ்வாரே யாமாகில்*
*தங்கா வினைகளும் சாரும் சிவகதி*
*சிங்கார மான திருவடி சேர்வரே*

– திருமந்திரம் –

என்று திருநீற்றின் உயர்வைக் குறிப்பிடுகின்றார். வினை நீங்கப் பெறுவதோடு சிவகதியும் கிடைக்கும் என்று உறுதி செய்கின்றார்கள்.

மந்திரமும் தந்திரமும் மருந்து மாகக் கூடிய திருநீறு பிணியை அகற்றும்; தீட்டைப் போக்கும்; ஞாபக சக்தியை வளர்க்கும்; பவாத்தை நீக்கும்; அத்தகு திருநீற்றை நாம் பக்குவமாக அணிய வேண்டும். புனிதமான பசுவின் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் விபூதியை மிகக் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். அணிவதற்காகப் பெற்றுக் கொள்ளும் நேரத்தில் புறஞ்சிந்த விடக் கூடாது. ஆலயங்களில் பெறும் விபூதியிற் தரித்தது போக எஞ்சியதைச் சிந்த விடாது வீட்டிற்குக் கொண்டு வந்து எமது வழிபாட்டிடத்திற் சேர்த்துக் கொள்ளலாம். கையைத் தட்டி நீக்கிக் கொள்வதோ, ஊதிவிடுவதோ தவிர்க்கப்பட வேண்டும்.

திருநீற்றின் பெருமையை உணர்ந்து, திருநீற்றுப் பதிகத்தைப் பாராயண செய்து, பக்தி சிரத்தையுடன், வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும், அண்ணாந்து, சிவ சிவ என்று சொல்லி விபூதியை அணிய வேண்டும்.

# நாவலர் அவதரித்தார் நல்லை நகர் தனிலே

-வித்துவான். வ. செல்லையா -

நாவலர் அவர்கள் ஐந்தாங் குரவரென்று போற்றப்படுகிறார். சைவசமய குரவர் நால்வர். அவர்கள் அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்போர் ஆவர். இறைவன் திருவருளாற் பல அற்புதங்களைச் செய்தமையால் அவர்கள் சமய குரவர்கள் என்று போற்றப்பட்டனர்.

ஆறுமுகம் என்னும் நாமகரணம் உடையவர் கல்விகேள்விகாளற் சிறந்து நாவன்மையும் உடையவராய்த் நிகழ்ந்தமையால் திருவாவடுறை ஆதீனம் நாவலர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இதன் பின் ஆறுமுக நாவலராக மதிப்பும் கௌரவமும் அவர் செயற் கரும் செயல்களால், வந்தெய்தின. அதன் பின் அவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் என்று அழைக்கப்பட்டார். நாவலரென்றால் ஆறு முகநாவலரையே குறிக்கும். நால்வர் என்றதும் சமய குரவர் நால்வரையுமே குறிக்கும். வேறு எவரையும் அப்பெயர் குறிக்காது. அந் நால்வரின் நெறிநின்று அரும்பாடுபட்டுச் சைவ சமயத்தைக் காத்தமையே நாவலர் அவர்களின் பெரும் பணியாக அமைந்தது.

நாவலர் அவதரித்தது யாழ்ப்பாணத்து நல்லூரிலாகும். நல்லூர் தமிழ் மன்னரின் (சங்கிலியன் போன்றோரின்) இராசதானியாக விளங்கியது. ஆதலின் அது நகரம். எனவே நல்லூர் நல்லை நகர் என்று அழைக்கப்படலாயிற்று. இங்கு நாவலர் அவதரித்தார் என்ற சொற்றொடரை நாம் அவதானிக்க வேண்டும். விடயத்தின் தலையங்கமும் அதுவே. அவதாரம் அவதரித்தல் என்பன ஒரு பொருளைத் தரும் பதங்கள். அவதாரம் என்றதும் கிருஷ்ணாவதாரம் ஞாபகத்துக்கு வருதல் கூடும். கிருஷ்ணர் பத்து அவதாரம் எடுத்தாகப் புராணங்களின் வாயிலாக அறிகிறோம். இங்கு அவதாரம் என்பது பக்குவப்பட்ட ஆன்மாக்களை இறைவன் துன்பங்களிலிருந்து காப்பாற்ற அவ்வவ்விடங்களுக்கு உபகாரப்பட வைப்பதாகும். இறைவன் அவதாரம் எடுப்பதில்லை. கடவுள் பிறப்பு இறப்பு இல்லாதவர். அவர் வேண்டிய போது வேண்டிய வடிவங்கள் (மூர்த்தங்களை) எடுத்து அருளுவாரே தவிர பிறவியெடுப்பதில்லை. கருவுற்று யோனிவாய்ச் சேரல் இல்லை. அவதார புருஷர்கள் பிறந்து இறைவனின் அருளிப்பாட்டை அவன் குறிப்பில் நின்று செய்வர். அவர்கள் கடவுள் அல்லர். தெய்வத்தில் வைத்துப் போற்றப்படுபவர். இதனைத் திருவள்ளுவ தேவர் கூறுமாற்றலும் அறியலாம் நாவலர் பெருமானும் ஒரு பக்குவப்பட்ட ஆன்மாவே. இறையருளால் சைவச் சாதனைகளைப் புரிந்துள்ளார்.

நாவலர் அவர்கள் பூமியிலே தோன்றிய நன் நாளைக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பின்வருமாறு கூறுகிறார்.

*"புண்ணியநாள் நாளெல்லாம் போற்றுநாள் செந்தமிழ்த்தாய்*
*எண்ணியெதிர் பார்க்கும் இனியநாள், – மண்ணுலகில்*
*மேவுமுயர் சைவம் விளங்கிடுநாள், ஆறுமுக*
*நாவலர்கோன் தோன்றியநல் நாள்.*

என்பது அது. பெரியோரின் வருகை எப்பொழுதும் நாட்டுக்கு நன்மையே யாகும். அது திருவருள் பாங்காம். "நாமொன்றும் அறியோம், எப்பவோ முடிந்த காரியம்" என்பர் யோக சுவாமிகள். தமிழ் நாட்டில் சேர சோழ பாண்டியர் ஆட்சிக் காலத்திலே எமது சைவசமயத்துக்குப் பிறமதத் தாக்கத்தால் நேர்ந்த பேரழிவைக் காக்க இறைவனால் அநுப்பப்பட்டவர்களே சமய குரவர்கள் நால்வரும் ஆவர். அவர்கள் திருவதாரஞ் செய்தனர் என்றே கூறப்பட்டுள்ளது. மாணிக்க வாசக சுவாமிகளைப் பற்றிக் கூறும் போது "சமய தரைகைகள் மழுங்க ஞான தினகரன் உதயஞ் செய்தார்'' என்று கடவுள் மாமுனிவர் கூறியுள்ளார்.

இந்நெறியை ஒற்றியே நாவலர் அவர்களின் வருகையும் அமைகிறது. யாழ்ப்பாணச் சமயம் சைவ சமயமே. மேல் நாட்டார் வருகைக்குப் பின்னரே சமய மாற்றம் நிகழ்ந்துள்ளது. அதுவும் ஒல்லாந்தர் காலமே மிகவும் பாதகமாக விருந்தது. நாளும் உடுபுடவை சம்பளம் தருகுவம் என்று அடுத்துக் கெடுத்த காலம் அது. மத மாற்றத்தின் உச்சக்கட்டமும் அதுவேயாகும். நெற்றியில் திருநீறு காணப்படாது. உண்ட இலை இறப்பில் செருகின காலம் என்றால் பார்க்க வேண்டியது தானே. இன்றும் இந்நிலை பயந்தோ பயப்படாமலோ ஊர்களிலே தொடர்கிறது. கோயிற் குளங்களே இருந்த இடம் தெரியாது அழிக்கப்பட்ட காலம் அது. அவ்வழிப்பின் சின்னங்களை இன்றும் யாழ்ப்பாணத்திற் காண முடியும்.

தேவையை நோக்கி இந்த வேளையில் இறைவன் திருவருளால் கந்தவேள் தந்த வேலாய் நாவலர் தோன்றினார். அவதார புருஷராக அவதரித்தார். ஐந்தாங் குரவர் என்று போற்றவுஞ் செய்தனர்.

அன்று யாழ்ப்பாணத்துச் சமப நிலை இது.

*"வேதம் வலி குன்றியது மேதகு சிவாகம*
*விதங்கள் குன்றின அடற்*
*சூதன் மொழி மூவறு புராணம் வலி குன்றியது*
*சொல்லரிய சைவ சமயப்*
*போதம் வலிகுன்றியது சொற்பொதிய மாமுனி*
*புகன்ற மொழி குன்றியது நம்*
*நாதனிணை ஞாலமிசை நாடரிய ஆறுமுக*
*நாவல ரடைந்த பொழுதே"*

என்று சி. வை. தாமோதரம்பிள்ளை பாடி வைத்த அருமந்த பாடலும் இங்கு சிந்திக்கத்தக்கது.

## நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | 1 | 16.12.98 | புதன் | மாதப்பிறப்பு. ஷடசீதி புண்ணிய காலம். பிரதோஷ விரதம் |
| | 3 | 18.12.98 | வெள்ளி | அமாவாசை விரதம் |
| | 5 | 20.12.98 | ஞாயிறு | சாக்கியர் குருபூசை |
| | 7 | 22.12.98 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 9. | 24.12.98 | வியாழன் | விநாயக ஷஷ்டி விரதம் உதயத்தின் முன் திருவெம்பாவைப் பூஜாரம்பம் |
| | 12. | 27.12.98 | ஞாயிறு | வாயிலார் குரு பூஜை |
| | 14 | 29.12.98 | செவ்வாய் | சுவர்க்க் வாயிலேகாதசி விரதம் |
| | 15 | 30.12.98 | புதன் | பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம் |
| | 17. | 01.01.99 | வெள்ளி | பூரணை விரதம், இரவு நடேசர் ஆர்த்திராபிஷேகம் சடையனார் குருபூஜை |
| | 18. | 02.01.99 | சனி | உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம் |
| | 21 | 05.01.99 | செவ்வாய் | சங்கட ஹர சதுர்த்தி விரதம் |
| | 24 | 08.01.99 | வெள்ளி | இயற்பகையார் குருபூஜை |
| | 27. | 11.01.99 | திங்கள் | மானக்கஞ்சாறர் குருபூஜை |
| | 29. | 13.01.99 | புதன் | ஏகாதசி விரதம் |
| | 30 | 14.01.99 | வியாழன் | உத்தராயண புண்ணிய காலம் மாலை 7.37 முதல் இரவு 2.01 வரை |

வத்தளை ஹேகித்த

## தொழுநோயாளர் தொழுமிடமாயமைந்த ஆலயம்

# தொழுமடியர் வழிபடுமிடமாய வரலாறு

- சி. கந்தசாமி -

*(கொழும்பு விவேகானந்தசபை முன்னாள் பரீட்சைச் செயலாளர்)*

★ நாற்புறமும் திருக்கோயில்கள்; ஒரு புறத்தில் நீதித்தலம்; மத்தியில் சைவசமய, தமிழ்மொழி, தமிழர் கலாசார வளர்ச்சிக்கென ஒரு தெய்வீக சபை; அதன் பெயர்தான் விவேகாநந்த சபை, கொழும்பு. தாபிதமான நாள் 1902 – 07– 13.

★ ஆரம்பித்த நாள் தொடக்கம் மூன்று இடங்களில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கியது. இப்பொழுதுள்ள கொழும்பு கொட்டாஞ்சேனை விவேகானந்த மேட்டுத் தெருவிற்கு 1919 இல் வந்தது. இது சபையினரின் சொந்த நிலமாகும்.

★ சமயப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, கலாசாரப்பற்று என்பவை மிக்கு, அறிவு நிலையிலும் மேலோங்கிய பெரியார்களது தியாக உழைப்பில் உருப் பெற்று வளர்ந்து வருவது இச்சபை. முன்னே காட்டப்பட்ட திருத்தலங்களின் அருட்பார்வையே இச்சபை வளர்ச்சிக்கான மூலமெனலாம். அதனாலே தான் புண்ணிய ஆத்மாக்கள் இதனைத் தேடி வந்து நற்பணி செய்துள்ளனர்.

★ விவேகானந்த சபையினரின் நூல்நிலையம் போன்றதொரு படிப்பகம் அந்த நாளிற் கொழும்புச் சூழலில் வே றெ ங் கு மே இருந்ததில்லை. மலரை நாடி வரும் தேனீக்கள் போல, பெரும் பெருங் கல்விமான்களெல்லாம் அந்தக் காலத்தில் இதனை நாடி வந்துள்ளனர். முத்தமிழ் வித்தகர் அருட்டிரு விபுலானந்த அடிகளார் கூட இதனைப் பயன் படுத்தியுள்ளார். சீ. மயில்வாகனன் எனும் முன்னைய நாமங் கொண்ட அடிகளார், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சைக்கு விண்ணப்பித்த போது, டாம் வீதியில் அந்தக்காலத்தியங்கிய இச்சபையின் முகவரியையே தம்முக வரியாகப் பயன்படுத்தினார். தம்மைத் தமிழ்படிக்க வைத்ததும், தமக்குத் தமிழார்வத்தை ஊட்டியதும் கொழும்பு விவேகானநந்த சபையே என்று அடிக்கடி சொல்லுவாரென அமரர் சைவத்திரு அருள் தியாகராசா அவர்கள் கூறுவர்.

★ சமயப் பிரசார நோக்கில் 1925 இல் வெளியாய விவேகானந்தன் இதழின் ஆசிரியராக விபுலானந்த அடிகளே இருந்திருக்கின்றார்கள்.

★ 1926 இல் இன்றைய விவேகானந்த மகா வித்தியாலயத் தோற்றம். இராஜயோகி சச்சிதானந்தர், விபுலானந்த அடிகளார் என்போர் அடிக்கல் நாட்டினர். தலைநகரில் மட்டுமன்றி இந்நாட்டிலேயே தலைசிறந்த கல்லூரியாக இது இன்று விளங்குகின்றது.

★ 1930 இல் சைவசமய பாடப்பரீட்சை அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்டது. இதனால் மாணவர்கள் மட்டுமன்றிப் பெரியோரும் பயன் கண்டனர். சைவத்தின் வேரை இந்த நாட்டில் ஊன்ற வைத்திருக்குஞ் சாதனம் இதுதானென்பது சரியானதே!

★ 1944இல் சைவசமய பாடத்தைச் சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சைக்கு ஒரு பாடமாக்கியதும் விவேகானந்த சபையே !

★ கொழும்பிலுள்ள சைவமக்கள் அந்தியேட்டிக் கிரியை (நீர்க்கடன்) செய்யத் தொல்லைப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் 1947 இல்,முகத்து வாரத்தில் அரசகாணிபொன்றைக் கட்டிடத்துடன் குத்தகைக் கெடுத்து இப்பணி செவ்வனம் நிறைவுற வழி செய்தது

விவேகானந்த சபை. காலப்போக்கிற் கடலரிப்புக் காரணமாகச் சிதைந்து 1952 இல் அப்பகுதி முழுமையாகக் கடலாற் கொள்ளப்பட்டது.

★ வெலிக்கடைச் சிறை, மகாரைச் சிறை, வாழ் கைதிகளுக்கும் ஹேகித்த சைவத் தொழு நோயாளர்களுக்கும் வெள்ளிக்கிழமைகளில் தக்கோர் வழி நல்ல சமய உண்மைகள் கிடைக்கச் சபை வழி செய்தது. வருடப்பிறப்பு, தீபாவளி, தைப்பொங்கல் என்னுஞ் சிறப்பு நாள்களில் அவர்களுக்கு உடை, சிற்றூண்டி வகைகளைச் சபை வழங்கியது.

★ இந்த வகை, நாள்கள் கடந்து கொண்டிருந்த போது, ஹேகித்த வைத்திய நிலையத்துள்ள தொழு நோயாளர்களுக்கு ஒரு ஆலயம் கட்டவேண்டும் என்று பலரது வேண்டுகோள் சபையை உணர்வு கொள்ள வைத்தது. கொழும்பிலுள்ள சைவத் தலைமை நிறுவனம் என்ற காரணத்தால் 1954 இல் பலர் இந்த வேண்டுகோளை விடுத்தனர். இறைவன் திருவருட் செயலாகச் சபை உறுப்பினர்கள் எல்லோரும் இந்நிகழ்வை மனங் குளிர ஆதரித்தனர். வேண்டியஅங்கீகாரங்கள் பெறப்பட்டன. குறுகிய காலத்துள் சிற்ப சாஸ்திர முறைப்படியான வரைபடமும் பெறப்பட்டது. சபையின் பெருமுயற்சியினாலும், கொடை வள்ளல்களது நிதி உதவியினாலும், அறிஞர்களது கருத்துக் குறியீடுகளாலும் ஆலயம் உருப்பெற்றது. அடியவர் அல்லல் தீர்க்கும் கலியுக வரதனான பாலமுருகன் கருவறையிற் கோயில் கொண்டான்.

★ 1956. 03. 18 மன்மத வருடம் பங்குனிமாதம் ரோகிணி நட்சத்திரம் கூடிய ஞாயிற்றுக் கிழமை ஹேகித்த தொழு நோயாளர் வைத்தியநிலைய ஸ்ரீ பாலசுப்பிரமணியர் ஆலயம் கும்பாபிஷேகங் கண்டது விவேகானந்த சபையின் அன்றைய தலைவர் திரு. கோ ஆள்வாப்பிள்ளை, செயலாளர் திரு. வி. அல்லிராசா, பொருளாளர் இ. பொன்னம்பலம் பின்னர் பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. வி. ஏ. கந்தையா, சட்டதரணி திரு சு. சோமசுந்தரம் வைத்திய கலாநிதி த. நல்லைநாதன் பட்டக்கண்ணு குமாரசுவாமி பின்னர் பாராளுமன்ற உறுப்பினரான க. பொ. இரத்தினம் சு. சிவசுப்பிரமணியம் போன்றோர் சேர்ந்த சபை இக்கோயிலைக் கட்டிப் பெருஞ்சாந்தி விழாக் கண்டமை பொன்னெழுத்துக்களாற் பொறித்து வைக்கப்படவேண்டிய ஒரு முக்கிய சம்பவம் என சபையின் ஆண்டறிக்கை குறிப்பிடுகின்றது.

★ இக் கோயிலில் வெள்ளி செவ்வாய் நாள்களிலும் விசேட வைபவ நாள்களிலும் கொழும்பிலிருந்து அர்ச்சகர் ஒருவர் சென்று பூஜை செய்து வந்தார். ஆண்டுதோறும் பங்குனி மாத ரோகிணி நட்சத்திரத்தில் ஸ்ரீ பால சுப்பிரமணியருக்கு வருடாபிஷேக (மணவாளக் கோல) விழா நடைபெறும் வழக்கமிருந்தது.

★ 1966–1967என்னும் ஆண்டுக் காலகட்டத்தில் சில திருத்த வேலைகள் நடைபெற்றன. வண்ணார்பண்ணைச் சிற்பி இராஜானந்தன் அந்தப் புனருத்தாரண வேலைகளைச் செய்தவர்.

★ "சங்கநிதி பதுமநி" என்று தொடங்கும் அப்பர் தேவாரத்தில், அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோ யராயாவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகி லவர்கண்டீர் நாம்வணங்குங் கடவுளாரேஎன்று குறிப்பிட்டுள்ளமை அவதானிக்கப்பட வேண்டும். இங்கு இந்த ஆலயத் தோற்றம்தொழுநோயாளர் சிந்தனையை மூலமாகவுடையது. கங்கைவார்சடைக் கரந்தார்க் கன்பராகில் அவர்கண்டீர் நாம் வணங்கும் கடவுளார் என்று அப்பர் சுவாமிகள் சொன்ன கருத்துப்படி இங்கு கோயில் கொண்டெழுந் தருளியுள்ள முருகனைத் தொழும் யாம்

அத்தொழுநோயாளரையும் கடவுளாக மதித்து வணங்குவோமாக. அவர்களும் மெய்யாடியார் கூட்டத்தைச் சேர்ந்தவர்களே!

★ காலச் சுழற்சியில் 1983 இல்ஆலயம் பாரிய பாதிப்பிற்குள்ளாயது. கோயில் இல்லை, நித்திய நைமித்தியமில்லை, விக்கிரகங்களில்லை ஆனால் அடியார் நெஞ்சில் முருகன் கோயில் கொண்டிருந்தான். நற்றவத்தோர் உள்ளத் தோம்பிய இறைவன் வெளிப்படத் தொங்கினான்.

★ 1994 இல் ஆட்சிக்கு வந்த நாடாளுமன்றப் பிரதிநிதி திரு நீல்ரூபசிங்கா அவர்கள் எடுத்துக் கொண்ட அரிய முயற்சியின் பயனாய், நல்லதோராலயம், பரிவாரமூர்த்தியராக எல்லோரையும் கொண்டதொரு பேராலயம் நம் முன்னே எழுந்து நிற்கின்றது. முருகன் அருட் பிரவாகம் எங்கும் பரிமளிக்கின்றது. நித்திய பூசைகளென்ன, நைமித்திய விழாக்கள் எல்லாம் வெகு விமரிசையாக நடை பெறுகின்றன.

★ தொழு நோயாளர்களுக் கென்று ஆரம்பமான கோயில் இன்று தொழும் அடியர்க்கென்றாகியுள்ள அற்புதத்தை நினைவு கொள்ள வேண்டும்.

★ 1983 அசம்பாவிதமே இந்த மாற்றத்திற்கெல்லாம் காரணம். அன்று நடந்த அந்தத் துர்ப்பாக்கிய நிகழ்வுகளே இன்று நாம்காணும் பெரிய வழிபாட்டிடத்திற்கு காரணமாயது. முருகன் திருவிளையாடலை எண்ணியெண்ணி இறும்பூதெய்துவோம்.

★ இன்று வத்தளை ஹெந்தளை வாழ் சைவப் பெருங்குடி மக்கள் எல்லோரதும் வழிபடுமிடமாக இதுமாறியுள்ளது.

★ இந்த ஆலயப் புனர்நிர்மாணத்திற்கு உழைப்பு வழங்கிய அனைவரும் திருமூலர் திருமந்திரங் கூறும் பலன்களை எய்துவர் என்பது உறுதி. அவர்கள் நல்வாழ்வை வேண்டி நாமும் பிரார்த்திக்கின்றோம்.

★ விவேகானந்த சபையார் ஏதோ நல்லூழ் காரணமாக 1956 இல் இந்த ஆலயத்தை ஆரம்பித்து வைத்தனர். அதற்கான பயனை அவர்கள் 1957 இல் அணைத்தனர். 1957.11.11 இல் புதுச் செட்டித்தெருவிற் சபையார் 58 பேர்ச் நிலத்தைக் கொள்வனவு செய்ய முருகன் அருள் துணையாகியது. 1961 இல் அரசிற்குக் கையளிக்கப்பட்ட பாடசாலைப் பல கட்டிடத் தொகுதி அந்த நிலத்திலேயே உண்டு.

★ இந்த அருட்சக்தி மேலும் மேலும் வளரும். எல்லோருக்கும் வாழ்வுதரும்

★ சிவாசாரியர் அர்ச்சகர், பரிபாலனக் கடமையினுள்ளோர், வழிபடுவோர் எல்லோரும் புனிதம் பேணுவார்களாக. எல்லோரும் ஒருவரை ஒருவர் மதிப்பார்களாக. முருகன் அருளை ஏற்கும் பக்குவமுடையோராகுக.

*"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க."*

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | தட்சணாமூர்த்தி | 9. | 63 நாயன்மார் சிலைகள் |
| 2. | திருமூலர் | 10. | முன்னேஸ்வரம் |
| 3. | திருக்கேதீஸ்வரம் | 11. | நகுலேஸ்வரம் |
| 4. | சுந்தரர் | 12. | நகுல முனிவர் பிதிர்ச்சாபம் நீங்கியமை |
| 5. | பாலாவி | 13. | ஒட்டு சுட்டான், கொக்கட்டிச் சோலை |
| 6. | மாதுமை | 14. | பூலோக நாயகி |
| 7. | பாவநாசம் | 15. | வண்ணக்கர் |
| 8. | முன்னேஸ்வரம் | | |

திருவிளையாடற் புராணம்:

# குண்டோதரனுக்கு அன்னமிட்டமை

- கூடலான் -

தடாதகைப்பிராட்டியாரின் திருமண நிறைவில் தரிசிக்க வந்த முனிவர்கள், தேவர்கள், அரசர்கள் யாவரையும் அமுது செய்வித்து, உடுப்பன, பூண்பன, பூசுவன, தாம்பூலம் எல்லாங் கொடுத்து அனுப்பியருளினர். அப்பொழுது மடைத் தொழிலாளர்கள் பிராட்டி திருமுன் சென்று வணங்கி "அடியேம் சமைத்த உணவு ஆயிரத்தொரு கூறாயினுந் தொலைந்திலது. அடியேம் அதனை யாது செய்வோம்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அது கேட்ட தடாதகைப்பிராட்டியார் தன் கணவராகிய சௌந்தரபாண்டியர் திருமுன்சென்று வணங்கி ஒதுங்கி நின்று சுவாமிகள் முப்பத்து முக்கோடி கணங்களோடும் இங்கே எழுந்தருளுதலை நினைந்து போனகம் அளவின்றிச் சமைக்கப்பட்டது. எஞ்சிய அன்னம் இமய மலையையும் அதன் புறத்துள்ள மலைகளும் சேர்ந்தாற் போலக் குவிந்து கிடக்கின்றது. கறிவர்க்கமும் அத்தன்மைத்தே என்று விண்ணப்பஞ் செய்தார். சிவபெருமான் புன்னகை செய்து "நீ தமிழ் நாட்டு மூவேந்தருட் சிறந்த பாண்டியராசன் மகளன்றோ! உன்னால் அரிதிற் பெறற்பாலது யாது? தேவ தருவும் உன் பணியைச் செய்துகொண்டு இருக்குமாயின் பிறர் செல்வமெல்லாம் உன் செல்வமன்றோ! அளவில்லாத உன் செல்வப் பெருக்கை நாம் அறியும் வண்ணம் சமைப்பித்தாய் போலும். உன்னுடைய விருந்தை உண்ணும்படி பசியினாலே களைப்படைந்தவர் நம்முடைய கணத்தினுள்ளே காணோம். நாம் செய்யத் தக்கது யாது? என்றார். அண்மையில் நின்ற குண்டோதரருடைய வயிற்றில் வடவாமுகாக்கினி மடுக்கும் வண்ணந் திருவுளங் கொண்டருளினார். அது உதராக்கினியை எழுப்ப குண்டோதரர் நஞ்சுண்டாற் போலச் சரீரம் சோர்ந்து வேர்த்து ஆவியொடுங்கி, "சுவாமி பசியினால் வருந்து கின்றேன்" என்றான். சிவபெருமான், "இக் குண்டோதரனுக்குஒரு பிடி சோறு கொடு, அப்புறஞ் சொல்லுவோம் என்றார். தடாதகைப்பிராட்டி வணங்கிக் கொண்டு போனார். குண்டோதரனும் உடனே நடைதளர்ந்து கண் புகைந்து வாய் புலர நடந்தான். பிராட்டியாருடைய ஏவலினால் ஏவன் மகளிர் குண்டோதரரைக் கொண்டுபோய் அன்னத்தின் முன் விடுத்தார்கள். குண்டோதரர் அங்குள்ள அன்னத்தையும் கறிகளையும், பால், தயிர், நெய், தேன் என்பவற்றையும், பழங்களையும், தேங்காய்களையும், வேக வைக்காத அன்னத்தையும் எடுத்துக்கொண்டார். உண்டும் பசி தீராமையால் வருத்தமுற்றார். இது கண்ட சேடியர்களுள்ளே சிலர் கையை நெரித்து அதிசயமடைந்தனர். சிலர் வெருண்டனர். சிலர் கையால் வாயைப் பொத்திக்கொண்டு போயினர். தடாதகைப்பிராட்டியார் அதிசயமடைந்து தனது நாயகர் திரு முன் போய் நாணம் உள்ளே கிடப்ப, அளகம் பிடரியிலே தாழ ஒதுங்கி நிலத்தைக் கிளைத்துக்கொண்டு நின்றனள். சிவபெருமான் அந்த நிலையைக் கண்டு அறியாதவர்போலப் பிராட்டியை நோக்கிக்

குண்டோதரன் உண்டு எஞ்சியுள்ளனவாயின் இன்னமும் பூதங்களை உன் மனம் மகிழும்வண்ணம் உண்பிப்போம் என்றார். அது கேட்ட பிராட்டி, சுவாமி! குண்டோதரனுடைய பசி இன்னும் அடங்கிற்றிலது. வேறு பூதங்களை விடுத்தருள்வீராயின் அவை உலகங்கள் எல்லாவற்றையும் எடுத்து உட்கொண்டுவிடும். அதனால் உமக்குச் சங்கார உருத்திரர் என்னுந் திருநாமம் மெய்யாகும். குண்டோதரன் தன்செயலைத் தானே இங்கு வந்து விண்ணப்பஞ் செய்ய நீர் அறிந்து கொள்வீர் என்றாள். அப்போது குண்டோதரர் பசித்தீ சுட வந்து, சுவாமி! எம்பெருமாட்டி சமைப்பித்த அன்னம் முதலியவைகள் மலைபோலக் கிடந்தன. அவைகளை அடியேன் எடுத்து உண்ணவும் என் பசி தணியாது உண்ணாதவர்களது வயிறு போலக் காந்துகிறது என்றார். பகைவருடைய முப்புரத்திட்ட தீ பசி உருவமாய் என் வயிற்றினுள்ளே குடிபுகுந்ததோ என்றவர் கை எறிவார்; அண்டங்கள் வெடிபடக் கதறுவார். ஐயோ, ஐயோ என்பார் பெருமூச்செறிவார். ஆவி சோர்ந்து தயங்குவார்.

கிருபா சமுத்திரமாகிய சோமசுந்தரக் கடவுள் தடாதகைப் பிராட்டியாரைப் பார்த்து உள்ளே நகைத்துப் பசியினால் வருந்துகின்ற குண்டோதரர் பொருட்டு அன்னபூரணியை நினைந்தருளினார். உடனும் நான்கு குழிகளிலே தயிர் கலந்த அன்னம் தோன்றியது. அத்தயிரன்னத்தைப் புசிக்கும்படி குண்டோதரனைச் சோமசுந்தரனார் பணித் தருளினார். அவன் அதைப் புசிக்கப் பசிநோய் நீக்கியது. சரீரம் வீங்கி நிலங் கிழிபட மலைபோல் விழுந்து புரண்டு தாகத்தினால் வருந்தி எழுந்து வாவி குளம் ஓடை கிணறு முதலியவற்றிலிருந்த நீரையெல்லாம் குடிந்தான். தாகம் நீங்காமையால் சோமசுந்தரர் திருவடிகளில் வீழ்ந்து விண்ணப்பித்தார்.

சிவபெருமான் தம் திருமுடியிலிருந்து கங்கையை நோக்கி நீ இம்மதுரையின் புறத்து ஒரு நதியாகி விரைந்து வருவாயாக என்று திருவாய் மலர்ந்தருளினார். கங்கை சிவனை வணங்கி, "கருணாநிதியாகிய சுவாமி, பகீரதன் பொருட்டுச் சென்று ஒரு தீர்த்தமாகி, உன்னிடத்தே ஸ்நானஞ் செய்வோருடைய பாவங்களைப் போக்குவாயாக என்று அன்றும் அடியேனைப் பணித்தருளினீர்கள். இன்றும் ஒரு நதியாகப் பணித்தருளுவீராயின் அடியேனைத் தரிசித்தவர்களுக்கும் பரிசித்தவர்களுக்கும் அடியேனிடம் ஸ்நானஞ் செய்தவர்களுக்கும் பிறவித் தொடர்ச்சியின் பற்றை அறுத்துப் பத்தியையும் ஞானத்தையும் அவைகளால் வரும் முத்தியையும் கொடுக்கும் பொருட்டுப் பணித்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்து வரங் கொண்டு வணங்கி அளப்பில் வேகத்துடன் மதுரையின் புறத்து ஒரு நதியாய் வந்தது. அது கண்ட சோமசுந்தரக் கடவுள் குண்டோதரனை அந்நதியிடத்து விடுத்தருள அவன் நதியிடையே புகுந்துகொண்டு இரண்டு கைகளையும் கரையேற நீட்டித் தடுத்து மலைபோல நிமிர்ந்து நீரை வாயங்காந்து குடித்து மகிழ்ச்சியுற்று எம் பெருமான் திருமுன் சென்று திருவடிகளை வணங்கி ஆனந்தக் கூத்தாடி அன்புருவாய் அளவில்லாத கீதங்கள் பாடினான். சோமசுந்தர பாண்டியர் அது கேட்டு மகிழ்ந்து கணங்கட்குத் தலைமை கொடுத்து தடாதகைப் பிராட்டியாரோடு பூமியை ஆட்சி செய்துகொண்டு எழுந்தருளி இருந்தார். இந்த நதி வைகை எனவும், சிவகங்கை எனவும், சிவஞான நதி எனவும், வேகவதி எனவும், கிருதமாலை எனவும் பெயர் பெறும்.

*(ஆதாரம்: நாவலர் திருவிளையாடற்புராண வசனம்)*

# சைவநீதி எங்கும் பரந்து பரிமளிப்பதாக

- ரவி சிவகுமார் -

*தலைவர், ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய பரிபாலன சபை*

*திகட சக்கரச் செம்முக மைந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.*

–கந்தபுரணம்

## முருகன் அருளாட்சி:

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றியது நம் சிவ வழிபாடு. ஆகவே அது புராதனமானது. எல்லாச் சமயங்களும் சைவத்தை முதன்மையாகக் கொண்டு தோன்றியவை என்ற கருத்துண்டு. அத்தகு சைவம் மென் மேலும் செழித்து ஓங்க வேண்டுமெனில் நாமெல்லாம் நற்சிந்தனை உடையவர்களாக, நல்லனவற்றைச் சொல்பவர்களாக, நற்செய்கைகளைச் செய்பவர்களாக, நற்குணம் படைத்தவர்களாக வாழவேண்டும். நல்லொழுக்கம் உடையவர்களாய், இறை சிந்தனையொடு கடவுட் தொண்டு புரிபவர்களாயும் மாற வேண்டும்.

ஆன்மீக அறிவு, அருட்கடாட்சம் என்பவற்றைப் பெறுவதற்காகவே நாம் ஆலயங்களை அணுகு கின்றோம். கலியுக வரதனான திருமுருகன், வள்ளி தேவசேனா உடனாகி எமது கிராமத்திற் கோயில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கின்றார். முருகன் அருளாட்சி எமது வழிபாட்டு நிலையையும் வளர்ச்சியடையச் செய்கின்றது.

## எமது பாக்கியம் :

வரலாற்றுச் சிறப்பு மிக்க பல ஆலயங்கள் எங்கள் இலங்கைத் திருநாட்டில் அமைந்துள்ளன. எமது ஆலயங்கூட அந்த வரிசையில் இடம் பெறக்கூடிய ஒன்று என்று கொள்ளப்படலாம் போலும். அண்மைக் காலத்தில் மகா கும்பாபிஷேகம் கண்ட எமது ஆலயம், அருளாட்சிவளம். திருவருட் பெருக்கம் என்பவற்றால் உயர்ந்து நிற்கின்றது. வரலாறு படைக்கக் கூடிய பாக்கியத்தை அது பெற்றிருக் கிறதென்று தெரிகிறது. இந்த ஆலயத்தைச் சார்ந்த பகுதி எமது வாழ்விட மாயமைந்தது நாம் முற்பிறப்பிற் செய்த பெரும் பாக்கியமென்றே எண்ணத் தோன்றுகின்றது. சைவசமய அபிவிருத்தி, இறை சிந்தனை வளர்ச்சி, இறை பக்திப் பெருக்கம் வேண்டுமெனில் அடியவர்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவு செய்யக் கூடியதொரு ஆலயம் எமக்கு வேண்டுமென விழைந்தோம். அந்த எமது விருப்பம் நிறைவேறுவது முருகன் திருவருள் தான் என்று சொல்ல வேண்டும். நாம் பெற்ற பெரும்பேறுகளுளொன்று நமக்குக் கிடைத்துள்ள ஆலயம்.

## எமது முயற்சி :

சைவ சமயம் தழைத் தோங்க வேண்டும். அடியவர் உள்ளத்தில் இறை தத்துவம் நிலைபெற வேண்டும். வழிபடுமெண்ணம் எல்லோர் உள்ளங்களிலும் உறைய வேண்டும். கூட்டு வழிபாட்டு முறை வளர்ச்சியடைய வேண்டும். சின்னஞ் சிறிசுகளுக்குரிய சமய அறிவு அறநெறிப் பாடசாலை மூலம் பெருக வேண்டும். ஆன்மீகப் பேருரைகள் மூலம் நமது சைவசமயக் கருத்துக்கள் எல்லோர் உள்ளங்களிலும் பதிய வேண்டும். பொதுப் பணிகள் மூலம் சமூகத்தில் நலிவுற்றவர்களுக்கு நன்மைகள் கிட்ட வேண்டும். இவ்வகை எமது முயற்சி பயனளிக்க எல்லோரதும் ஒன்றுபட்ட தொழிற்பாடு அவசியம் வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, நமது சைவ சமயச் சிறப்புக்களை வெளிக் கொணரக் கூடியதொரு சஞ்சிகை எங்களிடம் வேண்டும் என்று ஆசைப்பட்டோம். எங்கள் அருள்மிகு சிவசுப்பிரமணியர் திருவருளால் நல்லதொரு சைவசமய மாத இதழைச் ''சைவநீதி'' என்ற பெயரில் இப்போது பெற்றுக் கொண்டிருக்கின்றோம். மேன்மை கொள் சைவநீதியை எல்லோர் உள்ளத்தும் பதிய வைக்கும் அந்த இதழ் வெகுதானிய கார்த்திகை இதழாகிய இந்த மாத வெளியீடு வத்தளை ஹேகித்த அருள் மிகு ஸ்ரீ சிவசுப்பிமணிய சுவாமி ஆலய வருஷாபிஷேகச் (மணவாளக் கோல விழாச்) சிறப்பிதழாக வெளிவந்துள்ளது. இது கூட முருகனருள் என்று தான் நம்புகின்றோம். ''சைவநீதி'' மாத இதழ் சிறப்புக்களனைத்தும் பெற்று வளர்ச்சியடைய அருள்மிகு முருகன் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

# எங்களூர் ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலயம்

- மா. முத்துக்குமார் -

*பொதுச்செயலாளர்,* வத்தளை ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணியர் ஆலய பரிபாலனசபை

இலங்கையின் தலைநகராய கொழும்பு மாநகரிலிருந்து நீர்கொழும்பு வீதி வழி வத்தளை மேற்குத் திசை நோக்கிச் செல்லும் போது கால் மைல் தொலைவில் ஹேகித்த என்றொரு சிற்றூர் உண்டு. அங்கே களனி கங்கைக் கரையோரமாகக் கிழக்குத் திசையிற் கோயில் கொண்டு எழுந்தருளிச், சர்வானுக்கிரகராய், வள்ளி தேவசேனா சமேத சிவசுப்பிரமணியப் பெருமான், விநாயகர், விசாலாட்சி சமேத விஸ்வநாதர் பரிவாரத்தமைய இருந்து அடியார்களின் இஷ்ட சித்திகளை நிறைவு செய்து திருவருள் புரிந்து வருகின்றார். இங்கு எல்லா மூர்த்தங்களையும் பரிவாரத்தமைய வைத்துள்ளமை ஒரு சிறப்பம்சமாகும்.

இன்று பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சைவர்கள் வாழும் ஒரு பிரதேசமாக வத்தளை விளங்குகின்றது. அங்கே பூவும் பொட்டும் வைத்துச் சேலை கட்டி, மெட்டியிட்டு, மூக்குத்தியணிந்து, தமக்கே உரித்தான தமிழ்க் கலாசாரப் பண்பாட்டோடு, காளாஞ்சித் தட்டுடன் நடந்தும் வாகனங்களிலும் பவனி வரும் பெண்களையும், வேட்டி கட்டி, விபூதியணிந்து, சந்தனப் பொட்டு வைத்துக் கையிலே களாஞ்சி சகிதம் காட்சிதரும் ஆண்களையும் அநேகமாகக் காலை வேளையில் தெருவின் இருமருங்கிலும் இப்போ பார்க்க முடிகின்றது.

ஆலயத்திற் சைவ முறைப்படி பூஜைகள், ஆராதனைகள், உபயங்கள் நடைபெறுகின்றன. எல்லோரும் அதிகாலையே ஆலயத்துக்கு வந்து சுவாமியைத் தரிசனஞ் செய்து அலுவலகம், தொழிலிடங்கள், பாடசாலை செல்லும் முறைமை வழக்கமாகி விட்டது.

ஆலயம் சுமார் இருபத்தைந்து பேர்ச் நிலத்தில் அமைந்துள்ளது. இருப்பினும் பெரியதொரு ஆலயத்திற்குரிய எல்லா மூர்த்தங்களையும் இங்கு பரிவார அமைதியிற் காணமுடியும். விசேட உற்வசங்களின் போது சுவாமி உள்வீதி வலம் வந்து தரிசனமாகுங் கண்கொள்ளாக் காட்சியையும் பார்த்து ஆனந்திக்க முடியும். ஆன்மீகப் பேருரைகள் நடைபெறும் முறைமையும் உண்டு. திருவிளக்குப் பூஜை; கந்த ஷஷ்டி விரத அனுஷ்டானம், சிவராத்திரி விரத அனுஷ்டானம், நவராத்திரி விழா, திருவெம்பாவை என எல்லா நிகழ்வுகளையும் இங்கு பக்தியொடுடானாகிப் பார்க்க முடியும். அறநெறிப் பாடசாலையும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறு கின்றன. எமது ஆலயத்தின் இன்னுமொரு சிறப்பு ஆலயக் குருக்கள் இருவருமே வெள்ளி, செவ்வாய் நாள்களில் நடைபெறும் பூஜைகளை தொடர்ந்து 10 நிமிட நேரம் குட்டிப் பிரசங்கம் ஒன்றை நிகழ்த்தி அடியார்களுக்கு சைவ அறிவினைப் புகுத்தி வருகிறார்கள்.

வைகாசி விசாகத்தன்று தேர்த்திருவிழா பத்தாவது நாளாக வரக்கூடிய வகையில், முன் ஒன்பதாவது நாளிலிருந்து அலங்கார உற்சவம் நடைபெறும். வள்ளிதேவசேனா சமேதரராக முருகன் ஒரு தேரிலும், நாமெண்ணிய எண்ணியாங்கே எளிதில் முற்றுறக் கண்ணுதல் உடையதோர் களிற்று மாமுகன் மற்றோர் தேரிலுமாகக் கடந்த வைகாசி விசாகத்தன்று இருதேர்களில் உலா நிகழ்ந்தது. ஹெந்தளை வத்தளைப் பிரதேசமெங்கும், ஆறு மைல் சுற்று வட்டாரத்துள் வாழ்ந்த சகல அடியார்களும் கண்டின்புறக் கூடிய பெருவிழாவாக இது அமைந்தது. இந்தத் தேருலா நிகழ்வில் எமது பாராளுமன்ற உறுப்பினரும், பொலிஸ் பகுதி அதிகாரிகளும்

எமக்குப் பேருதவியாக இருந்தனர்.

இங்கு பெரும்பான்மையினராக வாழும் கிறீஸ்தவர்களின் விழாவை ''வத்தளை மங்கள'' என்றும், பௌத்தர்களின் விழாவை, ''ஹெந்தளை பெரஹர'' என்றும், எமது ஆலயத் தேர்த்திருவிழாவை, 'ஹேகித்த வேல் பெரஹர'' என்றும் சொல்வதில் இங்குள்ளோர் பெருமைப்படுகின்றனர்.



சூரசம்காரம்

தேர்த் திருவிழாவின் இறுதியில் வரும் தீர்த்தோற்சவமும் சிறப்பாக நடைபெறும். அன்று நடைபெறும் பாற்காவடி நிகழ்ச்சி உள்ளத்தைக் கொள்ளை கொள்வது. இந்த நிகழ்வு களனி கங்கை இந்து சமுத்திரத்துடன் சங்கமமாகும் இடத்திற்கு அண்மையாக நடைபெறுவது. இந்தப் பகுதியில் களனி கங்கையின் கிளை போன்றமைந்த, எழிலார் ஒல்லாந்தர் வெட்டுக் கால்வாயான கொழும்பு – புத்தளம் களப்பை இணைக்கும் ''எமில்டன்'' கரையோரத்திலிருந்து பால் காவடிப் பவனி புறப்படும், அடியார்களின் ''அரோஹரா'' ஒலியொடு ஆலயத்தை வந்தடையும் காவடிக் கண்கொள்ளாக் காட்சியொடு திருவிழா நிறைவு பெறும்.

கந்த ஷஷ்டி விழாவின் ஆறாவது நாள் சூரசம்ஹாரம் மிகச் சிறப்பாக நடைபெறும். தொடர்ந்து பட்டாபிஷேகம் திருக்கல்யாணம், வயிரவர் மடை என்பனவும் நடைபெறுவதுண்டு.

ஆலயக் கும்பாபிஷேகம் நிறைவெய்தி இரண்டு ஆண்டுகள் பூரணமாகும் வேளையாகிய இந்த வருஷாபிஷேக (மணவாளக் கோல) விழாச் சிறப்பிதழாக (1998. 12. 06) சைவநீதி வெகுதானிய கார்த்திகை இதழ் வெளிவருவது பெரு மகிழ்விற்குரியது. எம்மிறை புகழ் பாடி அது என்றென்றும் வாழ்வதாக.

இல்வாழ்க்கை முதலியவைகளிற் புகுந்து அவ்வவைகளுக்கு வேண்டுந் தொழில்கள் செய்வோருக்கு இடையறாத வழிபாடு எப்படிக் கூடுமெனில், கழைக் கூத்தன் கூத்தாடும் பொழுதும் அவன் கருத்து உடற் காப்பிலே வைக்கப்பட்டிருத்தல் போல நாம் லௌகிக கருமஞ் செய்யும் பொழுதும் நமது கருத்து சிவபெருமானிடத்தே வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; இப்படிச் செய்யா தொழியின் மரண காலத்திலே சிவத்தியானஞ் சித்திப்பது அரிதரிது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்.

வத்தளை ஹேகித்த

# அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

# ஆலய தரிசனமும் அறநெறி வளர்ச்சியும்

- பொன். நவராஜா -

*(அறநெறிப் பாடசாலை நிர்வாகப் பொறுப்பாளர்)*

*ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்*
*கெழுமையு மேமாப் புடைத்து*

– திருக்குறள்

ஒரு பிறப்பில் ஒருவன் கற்ற கல்வி, எழுபிறப்பும் தொடர்ந்து அவனுக்குப் பாதுகாப்பாக அமையும் என்பது வள்ளுவர் சிந்தனை. வத்தளை ஹேகித்த அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானச் சைவசமய அறநெறிப்பாடசாலை கடந்த 1997 புரட்டாதி விஜயதசமியன்று மங்கள கீத மொலிக்க, மாணவர் கீதமிசைக்க, சிவாசாரியர் மந்திர ஜெபஞ் செய்ய முருகப் பெருமான் திருவருள் துணைக் கொண்டு, இந்த வள்ளுவர் சிந்தனையை மனத்துக் கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. சுமார் ஐம்பது பிள்ளைகளோடு ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்த அறநெறிப் பாடசாலை இன்று இருநூறு மாணவர்களைக் கொண்டதாக வளர்ந்துள்ளது. ஆசிரியர் ஐவர் பெண்மணிகள் கல்வி பயிற்றுகின்றனர். ஆலய பரிபாலன சபையே இந்த நிர்வாகத்திற்கும் பொறுப்பானது. இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் உதவியும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.



அறநெறிப் பாடசாலை ஆரம்ப விழாவில் விருந்தினர் திரு. பொன் வல்லிபுரம், அவர்களைப் பரிபாலன சபைத் தலைவர் திரு. ரவி சிவகுமார் அவர்கள் பொட்டிட்டு வரவேற்பதைப் பாடசாலை மாணவர்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்

பெரும்பான்மை வேற்று மதத்தவர்களுக்கு மத்தியில், வத்தளையில் வாழ்ந்து வரும் சைவர்கள் "மதமாற்றம்" என்ற வல்லரக்கன் வலையிலகப்பட்டுச் சிக்குண்டு திக்கித் திணறிச் செய்வதறியாது வாழ்கின்றார்கள். மிகக் குறைந்தளவு அற்ப சலுகைகளுக்காகத் தங்களை வேற்று மதத்தவரிடம் விற்று வயிறு நிரப்பும் எங்கள் உடன் பிறப்புக்களாய சந்தர்ப்ப வாதிகளை என்னென்று சொல்வது.

எதிர்காலச் சந்ததியினரும் இந்த வகை நிலையை அடைந்துவிடக் கூடாது என்ற உயரிய நோக்கை முன்வைத்துச், சின்னஞ் சிறியவர்களை அற வழியிலே பக்குவஞ் செய்து வளர்ப்பதுதான் இப்பாடசாலையின் இலக்காக அமைந்தது. பத்தாயிரத்திற்கு மேற்பட்ட சைவ மக்கள் வாழும் வத்தளைப் பிரதேசத்திற் சைவப் பிள்ளைகளுக்கென ஒரு சைவப் பாடசாலை இல்லாத பெருங் குறையை எமது அறநெறிப் பாடசாலை சிறிதளவு தீர்க்கின்றது. வேற்றுமத ஆதிக்கத்தின் கீழியங்கும் பாடசாலைகளிற் கல்வி பயிலும் நம் சிறார்களுக்கு இஃதொரு பெரும் வரப்பிரசாதமாகும்.



முதல் வருட நிறைவு விழாவில்
திரு. க. இராஜபுவனீஸ்வரன், திருமதி. வசந்தா வைத்தியநாதன்,
தலைவர்- ரவிசிவகுமார், உப செயலாளர் திரு. க.கணேசன்,
பொறுப்பாளர் பொன். நவராஜா சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய சர்மா

முதலாம் ஆண்டு முதல் ஏழாம் ஆண்டு வரையான வகுப்புக்களை நாம் நடத்திக் கொண்டிருக்கின்றோம். அறநெறிப் பாடசாலை ஆயுளில் ஓராண்டு பூர்த்தியாகியுளது. முருகன் அருளொடு இரண்டாமாண்டுப் பணி தொடருகின்றது.

எங்கள் ஆலயம் சிறியதொரு நிலப்பகுதியில் அமைந்தது. அந்த நிலப்பகுதியில் அமைந்ததொரு மண்டபத்திலேயே அறநெறிப் பாடசாலையும் இயங்குகிறது. கட்டிட வசதி போதாமையாலேயே ஏனைய வகுப்புக்களை இங்கு நடத்த முடியவில்லை. எதிர்காலத் திருப்பணி வேலைகளுள் ஒன்று இப்போதிருக்கும் பாடசாலைப் பகுதியை மேல் மாடிக் கட்டிடமாக்குவது. அந்த நினைவு நிறைவாகியதும் நிறைவான கல்விக் கூடமாக எமது அறநெறிப் பாடசாலை இயங்கும். முருகன் அருட்டிரு நோக்குடன் முயலுவோம். குறிப்பிட்ட மேல் மாடியில் அறநெறி நூலகம் ஒன்றும் அமையும்.

இப்போ எமது கல்வி நிலையச் சிறார்களுக்குச் சத்துணவாகிய பால் கொடுக்கின்றோம். இனிமேல் பகலுணவும் வழங்கப்படக் கூடிய திட்டம் உண்டு. பாடசாலை உபகரணங்களையும் இதுவரை வழங்கினோம். இனி உபகரணங்களுடன் சீருடையும் வழங்கவுள்ளோம். எல்லாம் இனிது நிறைவெய்த முருகன் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

"இயலாமையினால் கல்வி இல்லையென்பதை
இல்லா தொழிப்போம்"

## சைவ சமய அறநெறி பாடசாலை ஆசிரியர்கள்

*முதலாம், இரண்டாம் ஆண்டு*
திருமதி. மஞ்சுளா திலகேசன்

*மூன்றாம் ஆண்டு:*
திருமதி. ஜோதிலட்சுமி செல்வராஜா


*நான்காம் ஆண்டு:*
செல்வி, யாழினி முத்துக்குமார்

*ஐந்தாம், ஆறாம் ஆண்டு:*
செல்வி. இந்திரலோசினி இராமலிங்கம்

*ஏழாம் ஆண்டு:*
செல்வி. சுபாசினி வேல்சாமி

உ

சிவமயம்



வள்ளி தேவசேனா உடனாகிச் சிவசுப்பிரமணியர் உலா வருகின்றார்.

வத்தளை ஹேகித்த

# அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

## *1999 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நிகழ்வுகள்*

| வெகுதானிய | ஜனவரி - 1999 | | | மார்கழி - தை |
|---|---|---|---|---|
| 1999.01.01 | மார்கழி | 17 | வெள்ளி | பூரணை – தீபபூஜை. |
| 1999.01.02 | மார்கழி | 18 | சனி | திருவெம்பாவை நிறைவு உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம். |
| 1999.01.15 | தை | 01 | வெள்ளி | தைப் பொங்கல். |
| 1999.01.26 | தை | 12 | செவ்வாய் | கார்த்திகை விரதம். |
| 1999.01.31 | தை | 17 | ஞாயிறு | தைப்பூசம் – பூரணை – தீபபூஜை. |

| வெகுதானிய | பெப்ரவரி - 1999 | | | தை - மாசி |
|---|---|---|---|---|
| 1999.02.14 | மாசி | 02 | ஞாயிறு | மஹா சிவராத்திரி. |
| 1999.02.22 | மாசி | 10 | திங்கள் | கார்த்திகை விரதம். |

| வெகுதானிய | மார்ச் - 1999 | | | மாசி - பங்குனி |
|---|---|---|---|---|
| 1999.03.01 | மாசி | 17 | திங்கள் | மாசி மகம் – பூரணை – தீபபூஜை. |
| 1999.03.22 | பங்குனி | 08 | திங்கள் | கார்த்திகை விரதம். |
| 1999.03.25 | பங்குனி | 11 | வியாழன் | ஸ்ரீ ராம நவமி. |
| 1999.03.31 | பங்குனி | 17 | புதன் | பூரணை – தீப பூஜை. |

| வெகுதானிய பிரமாதி | ஏப்பிரல் - 1999 | | | பங்குனி - சித்திரை |
|---|---|---|---|---|
| 1999.04.14 | சித்திரை | 01 | புதன் | பிரமாதி வருடப் பிறப்பு. |
| 1999.04.18 | சித்திரை | 05 | ஞாயிறு | கார்த்திகை விரதம். |
| 1999.04.29 | சித்திரை | 16 | வியாழன் | சித்திரைச் சித்திரை. |
| 1999.04.30 | சித்திரை | 17 | வெள்ளி | சித்திராப் பூரணை – தீபபூசை. |

| பிரமாதி | மே - 1999 | | | சித்திரை - வைகாசி |
|---|---|---|---|---|
| 1999.05.10 | சித்திரை | 27 | திங்கள் | நாவுக்கரசர் குருபூசை. |
| 1999.05.15 | வைகாசி | 01 | சனி | கார்த்திகை விரதம். |
| 1999.05.19 | வைகாசி | 05 | புதன் | அலங்கார உற்சவ ஆரம்பம். |
| 1999.05.28 | வைகாசி | 14 | வெள்ளி | வைகாசி விசாகம் – தேர்த் திருவிழா. |
| 1999.05.29 | வைகாசி | 15 | சனி | பாற்காவடி – பூரணை – தீபபூஜை. |

| பிரமாதி | யூன் - 1999 | | | வைகாசி - ஆனி |
|---|---|---|---|---|
| 1999.06.10 | வைகாசி | 18 | செவ்வாய் | ஞானசம்பந்தர் குருபூசை. |
| 1999.06.12 | வைகாசி | 29 | சனி | கார்த்திகை விரதம். |
| 1999.06.12 | வைகாசி | 07 | திங்கள் | ஆனி உத்தரம். |

| பிரமாதி | யூலை - 1999 | | | ஆனி - ஆடி |
|---|---|---|---|---|
| 1999.07.09 | ஆனி | 25 | வெள்ளி | கார்த்திகை விரதம். |
| 1999.07.16 | ஆனி | 32 | வெள்ளி | மாணிக்கவாசகர் குரு பூசை. |
| 1999.07.17 | ஆடி | 01 | சனி | ஆடிப் பிறப்பு. |
| 1999.07.28 | ஆடி | 12 | புதன் | பூரணை – தீப பூஜை. |

| பிரமாதி | ஆகஸ்ட் - 1999 | ஆடி - ஆவணி |
|---|---|---|

| பிரமாதி | நவம்பர் - 1999 | ஐப்பசி - கார்த்திகை |
|---|---|---|

| பிரமாதி | ஆகஸ்ட் - 1999 | | ஆடி - ஆவணி | |
|---|---|---|---|---|
| 1999.08.05 | ஆடி | 20 | வியாழன் | கார்த்திகை விரதம். |
| 1999.08.11 | ஆடி | 26 | புதன் | ஆடி அமாவாசை விரதம். |
| 1999.08.13 | ஆடி | 28 | வெள்ளி | ஆடிப்பூரம். |
| 1999.08.17 | ஆடி | 32 | செவ்வாய் | சுந்தரர் குருபூசை. |
| 1999.08.20 | ஆவணி | 03 | வெள்ளி | வரலக்ஷ்மி விரதம், திருவிளக்குப் பூஜை காப்புக் கட்டல். |
| 1999.08.26 | ஆவணி | 09 | வியாழன் | பூரணை – தீப பூஜை |


| பிரமாதி | செப்ரெம்பர் - 1999 | | ஆவணி - புரட்டாதி | |
|---|---|---|---|---|
| 1999.09.03 | ஆவணி | 16 | வியாழன் | கார்த்திகை விரதம். |
| 1999.09.13 | ஆவணி | 27 | திங்கள் | விநாயக சதுர்த்தி |
| 1999.09.18 | புரட்டாதி | 01 | சனி | புரட்டாதிச் சனி. |
| 1999.09.25 | புரட்டாதி | 08 | சனி | புரட்டாதி இரண்டாவது சனி. |
| 1999.09.29 | புரட்டாதி | 12 | புதன் | கார்த்திகை விரதம். |

| பிரமாதி | ஒக்ரோபர் - 1999 | | புரட்டாதி - ஐப்பசி | |
|---|---|---|---|---|
| 1999.10.02 | புரட்டாதி | 15 | சனி | புரட்டாதி மூன்றாவது சனி. |
| 1999.10.09 | புரட்டாதி | 22 | சனி | புரட்டாதி நான்காவது சனி, மஹாளய பக்ஷ முடிபு. |
| 1999.10.10 | புரட்டாதி | 23 | ஞாயிறு | நவராத்திரி விரதாரம்பம். |
| 1999.10.13 | புரட்டாதி | 26 | புதன் | மஹாலக்ஷ்மி பூஜை. |
| 1999.10.16 | புரட்டாதி | 29 | சனி | புரட்டாதி இறுதிச் சனி – சரஸ்வதி பூஜை ஆரம்பம். |
| 1999.10.19 | ஐப்பசி | 02 | செவ்வாய் | விஜயதசமி – காலை – ஏடுதொடக்கல் மாலை – மானம்பூ. |
| 1999.10.22 | ஐப்பசி | 05 | வெள்ளி | ஐப்பசி முதலாவது வெள்ளி. |
| 1999.10.24 | ஐப்பசி | 07 | ஞாயிறு | பூரணை – தீப பூசை. |
| 1999.10.26 | ஐப்பசி | 09 | செவ்வாய் | கார்த்திகை விரதம். |
| 1999.10.29 | ஐப்பசி | 12 | வெள்ளி | ஐப்பசி இரண்டாவது வெள்ளி. |

| பிரமாதி | நவம்பர் - 1999 | | ஐப்பசி - கார்த்திகை | |
|---|---|---|---|---|
| 1999.11.05 | ஐப்பசி | 19 | வெள்ளி | ஐப்பசி மூன்றாவது வெள்ளி. |
| 1999.11.07 | ஐப்பசி | 21 | ஞாயிறு | தீபாவளி – கேதார கௌரி விரதம். |
| 1999.11.08 | ஐப்பசி | 22 | திங்கள் | கந்த ஷஷ்டி விரதாரம்பம். |
| 1999.11.12 | ஐப்பசி | 26 | வெள்ளி | ஐப்பசி இறுதி வெள்ளி. |
| 1999.11.14 | ஐப்பசி | 28 | ஞாயிறு | கந்த ஷஷ்டி – சூரன் போர். |
| 1999.11.15 | ஐப்பசி | 29 | திங்கள் | பட்டாபிசேகம் |
| 1999.11.16 | ஐப்பசி | 30 | செவ்வாய் | திருக்கல்யாணம் |
| 1999.11.17 | கார்த்திகை | 01 | புதன் | திருவூஞ்சல். |
| 1999.11.18 | கார்த்திகை | 02 | வியாழன் | தீர்த்தோற்சவம். |
| 1999.11.22 | கார்த்திகை | 06 | திங்கள் | பூரணை – தீப பூஜை – சர்வாலய தீபம் |
| 1999.11.23 | கார்த்திகை | 07 | செவ்வாய் | திருக்கார்த்திகை விரதம். சொக்கப்பனை ஏற்றல் |
| 1999.11.24 | கார்த்திகை | 08 | புதன் | விநாயக ஷஷ்டி விரதாரம்பம். |
| 1999.11.27 | கார்த்திகை | 11 | சனி | வருசாபிஷேகம் (மணவாளக் கோலம்) சங்காபிஷேகம் |

| பிரமாதி | டிசம்பர் - 1999 | | கார்த்திகை - மார்கழி | |
|---|---|---|---|---|
| 1999.12.13 | கார்த்திகை | 27 | திங்கள் | விநாயக ஷஷ்டி விரதம். |
| 1999.12.14 | கார்த்திகை | 28 | செவ்வாய் | திருவெம்பாவை ஆரம்பம். |
| 1999.12.19 | மார்கழி | 04 | ஞாயிறு | சுவர்க்க வாயில் ஏகாதசி. |
| 1999.12.20 | மார்கழி | 05 | திங்கள் | கார்த்திகை விரதம். |
| 1999.12.22 | மார்கழி | 07 | புதன் | பூரணை – தீப பூஜை |
| 1999.12.23 | மார்கழி | 08 | வியாழன் | திருவெம்பாவை நிறைவு, நடேசர் ஆர்த்திரா தரிசனம். |

தேருலாக் காணத் தயாராகும் மூர்த்தியர்.



சிவாசாரியர் தீபாராதனையுடன் உலா ஆரம்மாகின்றது.

திருவாசகச் சிந்தனை.

# திருத்தெள்ளேணம்

- பண்டிதர் சி. அப்புத்துரை -

தெள்ளேணம் மகளிர் விளையாடுவதொரு விளையாட்டு. இந்த விளையாட்டுப் பற்றிய தெளிவான விபரம் எதுவுந் தெரியவில்லை. மணலை இட்டுத் தெள்ளிக் கொட்டி விளையாடும் விளையாட்டாக இருக்கலாம் என்பது திருவாசக உரையாசிரியர் திரு. கா. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் கருத்து. "பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ" என்பது பெரும்பான்மை உபயோகமாகவுளதாதலைப் பார்க்கிறோம். எனவே கொட்டுதல் – முழக்குதல் என்றே படும். மணலைத் தெள்ளிக் கொட்டுதல் என்பதன் பொருத்தமின்மை இங்கே சிந்திக்கப்பட வேண்டியது.

மணிவாசக சுவாமிகள் பாடியுள்ள இத் திருப்பதிகத்திலுள்ள திருப்பாடல்களெல்லாம் "தெள்ளேணங் கொட்டாமோ" என்று நிறைவுறுகின்றன. அதனால் அத்தெள்ளேணம் என்னும் தொடரையே, தெய்வீக உணர்வைத் தரும் திரு என்னும் அடையுடன் சேர்த்துத் திருத்தெள்ளேணம் என்று திருப்பதிகப் பெயராக அமைத்துள்ளனர்.

இத் திருப்பதிகத்திலுள்ள திருப்பாடல்கள் நாலடித் தரவு கொசகக் கலிப்பா என்னும் பாவகையைச் சேர்ந்தவை. இவற்றுள் ஆறாம் எட்டாம் திருப்பாடல்கள் மூன்றாம் அடிக்கண்ணும், ஏழாம், எட்டாம் திருப்பாடல்கள் இரண்டாம் அடிக்கண்ணும், பதின்மூன்றாந் திருப்பாடல் முதலாம் அடிக்கண்ணும் சீர்மிக்கு வருதல் கவனித்தற்குரியது. கொச்சகக் கலிப்பாவாதலின் சீர்மிக்கிருத்தல் தவறாகாது. இப்பதிகமும் இருபது திருப்பாடல்களையுடையது.

சிவனோடடைவு என்பது இத்திருப்பதிகத்தின் உள்ளார்ந்த பொருட்டெளிவெனத் திருவாசகத் திருவுள்ளக்கிடை குறிப்பிடும். சிவனிடத்திற் சேர்ந்து நிற்றல், சிவனை அடைந்து நிற்றல் என்று கருதலாம்.

திருமால், பன்றியாகி மண்ணை இடந்து சென்றும் உணர முடியாத திருவடிகளை நாம் கண்ணாற் பார்க்கக் கூடிய வகையில் வேதியனாம் உருவம் பெற்று வந்து என்னை ஆண்டருளினான். ஒரு பெயர், ஓர் உருவம் என்று ஒன்றுமே இல்லாத ஒருவற்கு ஆயிரம் திருப் பெயர்களைச் சொல்லி நாம் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

பாடிப் பரவுதற்குரியது இறைவன் திருநாமம் என்பது பெறப்படும்.

அழகு நிறைந்த திருப்பெருந்துறையில் வீற்றிருக்கின்ற எம் பெருமான் என்பிறப்பு மூலத்தை இல்லாமற் செய்தபின் பிறரெவரையும் யான் பொருளாகக் கண்டதில்லை. உள்ளத்துள் அருவமாகவும், புறத்தே உருவமாகவும் உள்ள அவன் எழுந்தருளியுள்ள திருவாரூரைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் ஊரைப் பாடிப் பரவவேண்டுமென்பது பெறப்படும்.

திருமால், அயன், ஏனைய தேவர்கள் எல்லோர்க்கும் அரியவராகி நின்ற முழுமுதற்கடவுள், எழுந்தருளி வந்து என்னை உள்ளம் உருகச் செய்து ஆட்கொள்வான் என்னும் செய்தியைக் கேட்டு உலகம்

நகையாடும் நிலையை விளையாட்டாகப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் ஆட் கொள்ளும் வகையை உலகம் அறியாது என்பது பெறப்படும்.

பயனற்ற தேவப் பிறப்புக்களில் தங்கி அநுபவிக்காமல், பிறவி மயக்கத்தினின்றும் அகற்றி என்னை ஆட்கொண்ட பரஞ்சோதி எனக்குப் புதுமையான ஞானத்தைத் தந்ததும், யான் எனது தன்மையை இழந்து சிவத்தினது தன்மையைப் பெற்றமையைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் ஆட்கொண்டபின் இறைவழி நிற்கும் ஆன்மாவின் நிலை பெறப்பட்டது.

அருமருந்தன்ன அமுதத்தை உண்ட தேவர்களாய அயன் திருமால் என்போர்க்கே காண்டற்கரிய சிவம், உருவம் உடையவனாகிப் பூமியிலுள்ளோர் மகிழ்வெய்த என்னை ஆட்கொண்டான். என் பிறவிக்குக் காரணமாகிய வினைவெந்து அழிந்தொழியக் கடைக்கண் திரு நோக்கமருளி என் உள்ளத்தே புகுந்த திருவருளைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் ஞான நோக்கு, பிறவித்துன்பத்தை நீக்கும் என்பது பெறப்பட்டது.

படம் விரித்தாடும் பாம்பைக் கச்சையாகக் கட்டியுள்ள சிவன், இந்த நிலவுலகிற்குப் பார்வதியோடு வந்து ஆண்டு கொண்ட திறத்தினை, எமது உரை தடுமாறவும், உள்ளே ஒளி விளங்கவும், ஒள்ளிய மலர் போன்ற கண்களில் நீர் திரை போலசையவும் உள்ளதாம் நிலையைப் பாடித்தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் ஆட்கொண்ட திறத்தினைப் பாடவேண்டுமென்பது பெறப்படும்.

திருமால், பிரமன், இந்திரன், ஏனைய தேவர்களுக்கு அரியவனாகிய சிவன் இரக்கங் கொண்டு நிலவுலகிற்கு வந்து, வா வா என்று என்னைப் பற்றி ஆண்டு கொண்டான். தன் மலரனைய திருவடிகளை என் தலைமேற் பொறித்த அளவில் யான் தெய்வ நிலை அடைந்தமையைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் திருவடிப்பேறு ஞானத்தைக் கொடுக்கும் என்பது பெறப்பட்டது.

காற்றாடி போன்ற உடம்பின் பிறப்பு இறப்பு என்பவற்றுக்குக் காரணமான நல்வினை தீவினை என்பவற்றின் அச்சம் தவிர்த்து என்னைச்சிவன் ஆண்டு கொண்டான். அவன் தன்னை நான் மறந்தாலும், தன் திருவடிகளை என்மீது பதித்தது மூலம் அவற்றை மறக்காதிருக்கச் செய்த திறத்தினைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

நல்வினை தீவினைகளால் வரும் அச்சத்தை நீக்க வல்லவன் இறைவன் என்பது பெறப்படும்.

கல்லில் நார் உரிப்பது போன்று, பக்குவமடையாத என்னை, தன் பொன்னடிகளைக் காட்டியது மூலம் ஆட்கொண்டருளிய சிவனது புகழை மின்னலை ஒத்த அசைகின்ற இடையையும் சிவந்த வாயையும், வெள்ளிய பற்களையுமுடைய பெண்களே, தென்னா தென்னா என்று பாடித் தெள்ளேணங் கொ்டுவோம் என்றவாறு.

கல்மனமும் கரையும் வகை செய்ய வல்லவன் இறைவன் என்பது பெறப்படும்.

கனவிற் கூடத் தேவர்கள் கண்டுகொள்ள முடியாத கழலணிந்த திருவடிகளையுடைய சிவன் உமாதேவியாருடன் நிலவுலகிற்கு வந்து என்னை ஆட்கொண்ட வாற்றினை நினைத்து வேல்போன்ற பெரிய கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோடத் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

வலிய வந்தாளும் இறைவனது எளிவந்த செயல் பெறப்படும்.

உமை பங்கன் என்னை ஆட்கொள்ளுதலும் யான் அயலவரை ஒழித்து, உறவினரை ஒழித்து, உலகப்பற்றொழித்து அவன் புகழன்றி வேறு பேச் சொழிந்து என் செய்கையும் ஒழிந்து நிற்கின்ற நிலையைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறையருள் பெற்றோர் தம்நிலை இழந்து நிற்பர் என்பது பெறப்படும்.

முனிவர் கூட்டம் முத்தி பெறும் பொருட்டு அலையவும், யானைக்கு அருள் செய்தவனாகிய இறைவன் அடியேனையும் ஆட்கொண்டான். பத்திக்கடலுள் அழுந்தச் செய்த ஒளிவடிவினனாகிய சிவன் எமக்கு இன்பஞ் செய்யும் வகையைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறையருள் இருந்தாற்றான் பக்தி செய்யலாமென்பது பெறப்படும்.

பூவுலகத்தார், கீழுலகத்தார், விண்ணவர், மற்று எல்லார் பகுதிக்கண்ணும் போய்ச் சேரா வகை என்னை ஆட்கொண்டருளிய இறைவனது வெளிப்பாட்டினை–நேர்மையைப்–பாராட்டு வதாகவுள்ள பாடலைப் பாடி, அவன் சீரினைப் பாடித்தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் புகழ் பாடுவோர் மேனிலை அடைவர் என்பது பெறப்படும்.

பிரமன், திருமால், மற்றைய தேவர்கள், ஞான நூல்கள் புகுந்து அறிய முடியாதவனாகி, இறைவன் நுண்ணியனாக வந்து அடியேன்பாற் புகுந்து யான் இரக்கப்படும்படி செய்த பாவத்தினாற் கண்களில் நீர் மல்கத் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறை கருணை பெற உருக வேண்டுமென்பது பெறப்படும்.

மனமுருகிப் பூரிப்படைந்து நெஞ்சங் குளிர்ந்து, மொண்டு குடிப்பதற்கு இனிமையான மேலான கருணையெனும் நீரையுடைய விசாலமான கடல் போன்றவனை, அடியவனாகிய எமது செல்வம் போன்றவனாகிய அழகன் திருவடிகளை நினைந்து புகழ்ந்து தெள்ளேணம் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் கருணைக் கடலானவன் என்பது பெறப்படும்.

புத்தனும், இந்திராதி தேவர்களும், திருமாலும், நான்முகனும் வணங்குகின்ற பித்தனும் திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருந்தவனும் எமது பிறவித் தழையை அறுத்தவனும் ஆகிய தில்லையம்பலவனது திருவருள் வடிவான திருவடிகள் என் மனத்துப் புகுந்த திறத்தினைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

இறைவன் அருட்கூத்து ஞானத்தைத் தருமென்பது பெறப்படும்.

பொய்ச் சமயங்கள், ஒன்றுக்கொன்று பொருந்தாத நூல்கள் என்பவற்றுடனாகிய குழப்பமான கடலில் அகப்பட்டுத் தடுமாறுகின்ற துன்பத்தைப் போக்கி தன்திருவடிப் பேற்றினை எனக்குத் தருகின்ற செயலைப் போற்றித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டவன் இறைவன் என்பது பெறப்படும்.

ஆகாயம் இல்லாதுபோய்க் காற்று ஒடுங்கித் தீயும் நீரும் மண்ணும் ஒழிந்து போயினும், தான் ஒடுங்குதலில்லாத தளர்வற்ற இறைவனுக்கு, என் உடம்பு அழிந்து ஆவி அடங்கி, உணர்வொடுங்கி, உள்ளமும் போய்த் தன்முனைப்பும் அடங்கும் விதத்தைப் பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

தன்முனைப்பு இருப்பது வரை இறைவனை அறியமுடியாதென்பது பெறப்படும்.

தேவர்களது முழுமுதல், கீழுலகத்தார்க்கு மூலம், மண்ணவர்க்கு மருந்து, அயன் திருமாலுக்குச் சேமிப்புநிதி போன்றவனாகிய இறைவன் யாம் கண்ணாரக் காணுமாறு வந்து நிற்கின்றான். அவன் கழலடிகளைத் தென்னா தென்னா என்று பாடித் தெள்ளேணங் கொட்டுவோம் என்றவாறு.

ஒவ்வொருவரைப் பொறுத்தவரை இறைவன் நிலையும் அவன் காவல் முறையையும் பெறப்பட்டது.

இறைவன் மேன்மையை, அவன் தலையிலணிந்த கொக்கிறகை, மந்தாரைப்பூவை, உமாதேவியார் அழகை, நஞ்சையுண்ட தன்மையை, தினமும் ஒலித்தலைச் செய்யும் நீர் சூழ்ந்த தில்லையிலாடுகின்ற இறைவன் திருவடிச் சிலம்போசையைப் பாடி நாம் தெள்ளேணங் கொட்டுவோம், என்றவாறு.

இறைவன் திருநடனப்புகழ் புகழப்பட வேண்டியதென்பது பெறப்பட்டது.

இறைவன் திருநாமம், ஊர், ஆட்கொள்ளும் முறைமை, பின் நிற்கவேண்டிய நிலை, ஞான நோக்கின் பெருமதி, ஆண்டு கொண்டமை, திருவடிப்பேறு, அச்சத்தை நீக்குபவன் என்பது, எதையும் இயைவிக்கக் கூடியவன் என்பது எளிவந்த செயலினனென்பது, அவனை அணைத்த பின் எல்லாவற்றையும் துறக்கும் நிலை, இறையருளின் இன்றியமையாமை, இறைவனையே பாடவேண்டும், கருணைப்பேறு, அவன் கருணைக்கடல், இறை அருட்கூத்து, அப்பாற்பட்ட நிலை, அவனை அறியக்கூடிய நிலை, காவல் முறைமை, திருநடப் புகழ் என்பவையெல்லாம் இத்திருப்பதிகத்துச் செய்திகளாகும்.

## திருக்கோயிலிலே செய்யத் தகாத் குற்றங்கள்:

*ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்கு நீர் சிந்தல், பாக்கு வெற்றிலை உண்டல், போசன பானம் பண்ணுதல், ஆசனத்திருத்தல், சயனித்தல், காலை நீட்டிக் கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், சிரசிலே வஸ்திரந் தரித்துக் கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக் கொள்ளுதல், போர்த்துக் கொள்ளுதல், பாதரக்ஷை இட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல், தூபி, துவசத்தம்பம், பலிபீடம், இடபம், விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், வீண் வார்த்தை பேசுதல், தேவையின்றிச் சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்திற்கும் குறுக்கே போதல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், திரையிட்டபின் வணங்கல், அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், திருவிளக்கவியக் கண்டுந் தூண்டா தொழிதல், திருவிளக்கில்லாத போது வணங்குதல், உற்சவங் கொண்டருளும் போது அங்கேயன்றி உள்ளே சென்று வணங்குதல் முதலியவைகளாம்.*

-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்-

# ஆனாய நாயனார்

- சிவ சண்முகவடிவேல் -

மேன்மழ நாட்டில் சோலைகள் மிக உயரமானவை. சோலைகள் எங்கும் மலர்மணம் கமழும். சந்திரன் வான் வழிச் செல்லும். சோலையின் வளர்ச்சி மிகுதியினால் மதி சோலையினுள் நுழைந்து மேல் ஏறிச் செல்வது போல் தோன்றும்.

வயல்களில் சூடு அடிக்க நெற்போரை விரிப்பார்கள். நெற்போரினுள் இருந்த வண்டுகள் வயல்வரம்புகளில் ஏறிச் செல்லும். வைக்கோற் போரை மிக உயர்த்தி வைப்பார்கள். மேகக் கூட்டங்கள் போரின் மீது மெதுவாகத் தவழ்ந்து ஏகுவன போன்ற அத்தகையவாய இயற்கை வள இயல்பு. மேன்மழ நாடு நீர் வளம் நிரம்பியது.

வண்டுகள் உழத்தியரின் கூந்தலில் உறங்குவன. தாமரை மலரிற் கயல்மீன்கள் உறங்குவன. எருமைகள் குளிர்ந்த தேமாஞ் சோலை நீழலில் உறங்குவ.

பெருநதி பெருகிப் பாயும். நீண்ட அலைகள் சங்குகளைக் கரை சேர்க்கும். சங்குகள் செழித்த வாழைப்புதரிற் போவன. வாழைகளைச் சுற்றிய பசுங்கொடிகள்; சங்குகள் ஊர்ந்து செல்லும். அதிலிருந்து கமுக மரத்தின் உச்சியைச் சேரும். கமுகம் பாளை முத்துக்களைச் சொரியும்.

மேன்மழ நாடு மண்ணுலகை அழகுபடுத்துவது. அதற்கு மங்கலமாக விளங்குவது திருமங்கலம். திருமங்கலம் பழமையான ஊர். சிவ வாழ்வு தரவல்லது அம்மூதூர். ஆயர் குலத்தவர்கள் அங்குள்ளார்கள். ஆயர் மேலும் அருமைபெற ஆனாயர் வந்து உதயஞ் செய்தார்.

ஆனாயர் திருநீற்றை விரும்புபவர். திருநீறு தூய்மையானது. பிரகாசமுடையது. பெருமை கொடுக்கும் திருநீற்றைப் பேணி அணிபவர் ஆனாயனார். திருநீற்றுத் திருத்தொண்டிற்குத் தம்மை அடிமையாக்கிக் கொண்டார். ஆனாயனார் பேயுடன் ஆடும் பிரான் பாதங்களையே மனத்தினால் நினைப்பவர். வாக்கினால் வழுத்துபவர். காயத்தினால் கடமை புரிபவர்.

ஆனாயர் ஆ இனம் ஆதரிப்பவர். நாளும் பசுக் கூட்டங்களை முல்லை நிலக் காட்டிற்குக் கூட்டிச் செல்வார். ஆனாயர் பசுக் கூட்டத்தை விலங்குகளினின்றும் பாதுகாப்பார். நோய் அணுகாது நோக்குவார். தூய சுவையான மென் புல் நுகர்விப்பார். நன்னீர் பருகச் செய்வார். பசுக் கூட்டங்களை மேலும் பல்கச் செய்தார். அவர் ஏவலைக் கோவலர் ஏற்பர். ஆயர் குலம் பேணும் காவலரானார் ஆனாயர். பேணும் போதும் பிரான் அடி மறவாத சிந்தையரானார்.

எந்தையார் அடிச் சிந்தை மறவாத அன்பின் வெளிப்பாடாக இசை பெருக்கினார். புல்லாங்குழல் இசையின் உள்ளீடாக ஐந்தெழுத்தைப் போற்றினார்.

ஏழிசையுடன் சுருதி, சேர வாசிப்பதை வழமையாக்கி வந்தார். சரம், அசரம் அனைத்தும் இசையில் வசப்பட்டன. ஓரறிவு முதலாக ஆறறிவு ஈறாக உயிர் அனைத்தும் அமுத இசையில் தம் செயலற்று நிற்பனவாயின.

ஒரு நாள்,

ஆனாயனார் மணமலர் மாலையால் தலைமயிரை உயர முடித்துக் கட்டினார். கொண்டை மாலை சூடினார். இண்டை மாலை புனைந்தார். செங்காந்தளின் அழகிய மலரை வடிந்த காதின் ஒளி விளங்க அணிந்தார்.

கண்டாரைக் கவரும் திருநீற்றை நெற்றியில் அணிந்தார். ஒளி தயங்கியது. கவின் கொள்ள மேனியிலும் தரித்தார். முல்லை அரும்பாலான மாலை மார்பை அலங்கரித்தது. திண்ணிய தோள்மாலை சுரும்புகளின் ரீங்காரத்தால் மலர்ந்தன. திருவரையில் மரவுரி ஆடை. அதன் மேல் தழைகளால் புனைந்த மேலாடை. அது மேலும் அழகு செய்தது.

திருவடியிற் செருப்பு. சிறுகோலும் புல்லாங்குழலும் செங்கையில் திகழ்ந்தன. ஏவல் புரியும் ஆயர்கள் பின்னே வந்தார்கள். கன்றுகளோடு சேர்ந்த பசுக் கூட்டங்கள் சூழ்ந்து வருகின்றன.

ஆனாயர் முல்லை நிலப்புறம் வந்தார். ஆங்கு ஒரு கொன்றை மரம் விளங்கியது. கட்டப்பட்ட மலர்மாலை போல மணம் பரப்பியது. கொத்துக் கொத்தாகப் பூக்கள் பொலிந்தன. பக்கம் எங்கும் சடைகளைப் பரப்பிய சிவபிரானாக ஆனாயனாருக்கு அது தோற்றம் அளித்தது. கொன்றை மரம் மருங்காக வந்தார். நேருக்கு நேராகப் பார்த்தார். உள்ளம் உருகியது. ஆனாயர் அன்பை மடை போலத் திறந்தார்.

ஆனாயர் புல்லாங்குழலை மலர்களில் வண்டு தாது பிடிப்பது போலப் பற்றிக் கொண்டார். விரல்களால் சூழுதல், முரலுதல், எழுதல், நிற்றல் செய்தார். தனியான துளையில் மணி அதரம் வைத்து ஊதினார் இசை ஒப்பு ஆராய்ந்தார். ஆரோகணம் அவரோகணம் அமைத்தார். சுருதியில் வலிவு சமன் மெலிவு அமைத்தார்.

மாதுரிய நாதம் பிறந்தது. திருவாளன் எழுத்தைஞ்சும் தூய இசை கொண்டன. ஓசை எழுந்தது. அமுத கீத இசை எப்பக்கமும் பரப்பினார்.

வள்ளலார் வாசித்தார். உள்ளுறையாக அஞ்செழுத்து ஓங்கியது. மதுர நாதம் மலர்ந்தது. தேவர்களுடைய தேனினும் இனிய தெள்ளமுதுடன் சேர்ந்தது. இசைநாத வெள்ளம் எல்லா உயிரின் செவியில் வார்ப்பது போலத் தேக்கியது.

ஆனாயர் அருகாகப் புல்லுண்ணும் பசுக்கள் கூட்டமாக வந்து அணைந்தன. தம் வசம் இழந்து நின்றன. தாய் முலையில் பற்றும் பாலூறு வாய்க் கன்றுகள் பாலை மறந்தன.

எருதுகள் மயிர் முகிழ்ப்ப வந்து அணைந்தன. மான் முதலிய காட்டு விலங்குகள் அவ்வண்ணமாயின. ஆடும் மயில்கள் அசைவற்று அணைந்தன. பறவை இனங்களும் வந்து படிந்தன. ஏவலர் செயலற்று நின்றனர்.

நாகர்கள் நண்ணினார்கள். மலையர மகளிர் மலிந்தார்கள். விமானத்தில் வந்தார்கள் விஞ்சையர், சாரணர், கின்னரர், தேவர்கள். தேவமகளிர் கனிவாய் மென்கிளியுடன் வந்தார்கள். வந்தவர்கள் எல்லோரும் பரவிய ஏழிசை அமுதம் பருகினார்கள்.

வருந்துகின்றவர்களும் வருந்துபவர்களும் உணர்வு ஒன்றானார்கள். நாகம் மயிலின் மீது மயங்கி வீழ்ந்தது. சிங்கமும் யானையும் சேர்ந்து வந்தன. புலிவாய்ப் பக்கமாகப் புல்வாய் போந்தது.

காற்று வேகம் கொள்ளாது. மரங்களில் மலர்க்கொம்பர் அசையாது, மலைவீழ் அருவி சலசலக்காது. காட்டாறு குமுறாது. முகில் முன் செல்லாது. மழைத்துளி பொழியாது. இடி முழங்காது. ஏழ்கடல் எறியாது.

ஆனாயரின் திருக்குழல் வாசனை உருவங்கள் வேறுபட்டாலும் உணர்வை இசையில் மயக்கியது.

சிவபெருமானுடைய திருச்செவி அருகிலும் பெருகியது. மனத்தன்பின் விளைந்த குழலோசையைச் செவிமடுத்தார் சிவபெருமான். சிவகாமசுந்தரி அம்பாளுடன் வான் வழியாக வந்தருளினார்.

இசை விரும்பும் கூத்தனார் ஆனாயனாருக்கு எதிர் நின்றார். மழவிடை மேல் முதல்வனார் முன்னின்றார். செம்மனத்து ஆனாயனார் திருக்குழல் வாசனையை எப்பொழுதும் செவிமடுக்கத் திருவுளங் கொண்டார். "இத்தன்மையாக எம்மிட மணைவாய்" என்று அருள் செய்தார். ஆனாயனார் அந்நிலை பெயர்ந்தார். சிவபிரான் திருப்பக்கம் சேர்ந்தார். சேக்கிழார் எடுத்த செஞ்சொற் கோயில் இது:–

*"முன்னின்ற மழவிடை மேன் முதல்வனா ரெப்பொழுதுஞ்*
*செந்நின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா சனைகேட்க*
*இந்நின்ற நிலையேநம் பாலணைவா யெனவவரும்*
*அந்நின்ற நிலைபெயர்ப்பா ரையர்திரு மருங்கணைந்தார்."*

விண்ணவர்கள் மலர்மாரி மேதினி மேல் விளங்கியது. முனிவர்கள் வேதத்தார் ஏத்தினார்கள். ஆனாயனார் திருக்குழல் இசைத்து உடன் சென்றார். எம்பெருமான் எழுந்தருளிப் பொன்னம்பலம் புகுந்தார்.

# விரதங்களும் விழாக்களும்

-சிவஸ்ரீ சி. தியாகராஜக் குருக்கள்-
பிரதம குரு, ஹேகித்த அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயம்

அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி தேவஸ்தானத்தில் விழாக்கள் அனைத்தும் நடைபெறுகின்றன. சைவ சமயிகள் அனுட்டிக்கும் விரதங்களும் பெரும்பான்மையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன. விநாயகனை வேண்டிச் சதுர்த்தி விரதமும், முருகனைத் தியானித்துக் கார்த்திகை விரதமும், கந்தஷஷ்டி விரதமும், சிவனைத் தியானித்துச் சிவராத்திரி விரதமும், அம்பாளை வேண்டி நவராத்திரி விரதமும் கைக்கொள்ளப்படுகின்றன.

செவ்வாய் தோறும் இராகுகால அபிஷேகமும், பௌர்ணமி தோறும் மஹாலட்சுமிக்குத் தீபபூசையும், சனிக் கிழமைகளில் நவக்கிரக தேவர்களுக்கு அபிஷேக பூசையும், எள்ளெண்ணெய் எரித்தலும், சந்தானம் வேண்டி ஞாயிற்றுக்கிழமைகளில் சந்தான கோபாலருக்கு அபிஷேக பூசையும், குருதோஷ நிவிர்த்திக்காக வியாழக் கிழமைகளில் தஷிணாமூர்த்திக்கு அபிஷேக ஆராதனையும், நாகதோஷ நிவர்த்திக்காகச் செவ்வாய் வெள்ளிக் கிழமைகளில் நாகபூஷணி அம்பாளுக்கு அபிஷேக ஆராதனையும் நடைபெறுகின்றன.

வைகாசி விசாகம் நிறைவுநாளாகப் பத்துத் தினங்கள் அலங்கார உற்சவமும், பத்தாவது நாளாகிய விசாகத்தன்று தேர்த்திருவிழாவும் நடைபெறும். அடுத்துவரும் நாளிற் பாற் காவடி எடுத்தல் நடைபெறுகிறது.

கந்த ஷஷ்டிக் காலத்திற் காலையிற் புராணப்படிப்பும், மாலையில் அபிஷேக ஆராதனையும் நடைபெறும். ஆறாவது நாள் சூரன் போரும், ஏழாவது நாள் முருகனுக்குப் பட்டாபிஷேகமும், எட்டாம்நாள் வள்ளி முருகன், தேவசேனா முருகன் திருக் கல்யாணமும், ஒன்பதாவது நாள் திருவூஞ்சலும், பத்தாம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறுவது வழக்கமாகும்.

கார்த்திகை மாதத்திய திருக் கார்த்திகை உற்சவம் பத்தாயிரந் தீபங்கள் ஏற்றிக் கொண்டாடப்படுவது. திருவெம்பாவைக் காலத்தில் சிவனுக்கு விசேட அபிஷேகம் நடைபெறும். திருவெம்பாவை படிக்கப்படும்.

தினமும் திருப்பள்ளியெழுச்சி பாடப்படுவது இங்குள்ள சிறப்பு நிகழ்ச்சிகளுள் ஒன்று. அதன் பின்னரே மூலவர் கதவு திறக்கப்படும்.

**முருகன் திருவருள் எல்லோர்க்குங் கிடைப்பதாக.**

வத்தளை ஹேகித்த

# அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

## கடந்த இரண்டு வருட காலத்துள் நடைபெற்ற சிறப்புப் பணிகள்

1. ஆலயத்திற்கென வீட்டுடன் காணியொன்றை விலை கொடுத்து வாங்கியுள்ளோம். ஆலய வளவினுளிருந்த சிவாசாரியர்களது குடியிருப்பிடமாக அது பயன்படுத்தப் படுகின்றது.

2. வத்தளை வரலாற்றில் முதன் முறையாக, 1997 வைகாசி விசாகத்தன்று திருமுருகனைத் தேரில் உலாவரச் செய்து ஆனந்தித்தோம். ஆனந்த வெள்ளத்தில் மூழ்கிய மக்கள் கூட்டம் பாற் காவடி எடுத்ததுடன் களனி கங்கையில் தீர்த்தமும் ஆடினர்.

3. கடந்த 1998. 06. 08 வைகாசி விசாகத்தன்று இரண்டாவது முறையாகவும் முருகனையும் விநாயகனையும் இரு தேர்களில் வத்தளைப் பிரதேசமெங்கும் உலாவரச் செய்து கண்டானந்தித்தோம்.

4. ஆலயத்தின் சிறப்பு நிகழ்வுகளாக எல்லா விழாக்களும் கொண்டாடப்படுகின்றன. தைப் பொங்கல், சிவராத்திரி, மாசிமகம், வருடப்பிறப்பு, சித்திராப் பூரணை, வைகாசி விசாகம், ஆடிப்பிறப்பு, விநாயக சதுர்த்தி, நவராத்திரி, கந்த ஷஷ்டி, அதன் நிறைவில் சூரசம்ஹாரம், பட்டாபிஷேகம், திருக் கல்யாணம், திருவூஞ்சல், வயிரவர் மடை, என்னும் விழாக்களும், திருக்கார்த்திகை, திரு வெம்பாவை, என்பனவும் கொண்டாடப்படுகின்றன. வரலக்சுமி விரதம், கௌரி நோன்பு என்பனவும் சிறப்பாக நடைபெறுகின்றன. மாதா மாதம் வரும் கார்த்திகைத் திருநாள் சுவாமி வீதியுலா வரும் விழாவாக நடைபெறும்.

5. 1989 இல் ஆரம்பிக்கப்பட்ட திருவிளக்குப் பூசை பாலஸ்தாபனத்தின் பின் பௌர்ணமித் தினங்களிற் சிறப்பாக நடைபெறுகின்றது. கன்னியர்களும், மாங்கல்ய தாரிகளான மங்கையர்களும் இந்நிகழ்விற் கலந்து கொண்டு பெரும்பேறு பெறுகின்றனர்.

6. ஹெந்தளை புராண மகா விகாரைப் (ஹெந்தளைப் பன்சல) பெரஹரா விழாவின் போது, ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயப் பங்களிப்பான ஒரு நிகழ்வினைப் பவனியில் இடம் பெறச் செய்துள்ளோம். . இச் செயற்பாட்டின் மூலம் மக்களிடையே ஒருமைப்பாட்டினை வளர்க்க முயன்றுள்ளோம்.

7. விநாயகர், மஹாலட்சுமி என்போரை வசந்த மண்டபத்தே உற்சவமூர்த்திகளாகக் காணும் வாய்ப்பைப் பெற்றுள்ளோம்.

8. கருமாரி அம்மன் மஹாலட்சுமி பரிவார மூர்த்தியர் நூதன பிரதிஷ்டா கும்பாபிஷேகம் 1997. 07. 29 இல் நடைபெற்றது.

9. வத்தளை வாழ் சைவச் சிறார்களின் நலன் கருதி 1997 விஜய தசமியன்று சைவ சமய அறநெறிப் பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்படடுள்ளது.

10. அறநெறிப் பாடசாலையிற் பயிலும் மாணவர்களுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அத்துடன் சத்துணவாகிய பாலும் வழங்கப்படுகின்றது.

11. இரவு பகல் ஆலய பாதுகாப்புச் சேவை நடைமுறைப்படுத்தப்பட்டுப் பாதுகாப்பை வலுவடையச் செய்துள்ளோம்.

*- ஆலயபரிபாலன சபையினர்.*

# வத்தளை ஹேகித்த
# அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்
# திருவூஞ்சற் பாமாலை

- செல்லையா நவநீதகுமார் -

## காப்பு

சீர்பொலியுஞ் சிவபூமி யென்றே போற்றும்
சிறப்புமிகு இலங்கையெனும் தீவின் மேலை
நீர்வளமும் நிலவளமும் நிறைவாய் உற்றே
நிலைபெறு வத்தளைக்ஹே கித்த மேவும்
சூர்தடிந்த சுடர்நெடுவேற் கரத்துப் பிள்ளை
சுப்பிரமண்ய சுவாமிமீ தூஞ்சல் பாடக்
கூர்மருப்போர் கரத்தினிலே கொண்ட எந்தை
குஞ்சரநின் செஞ்சரணம் காப்ப தாமே

## நூல்

1. மாற்றுயர்ந்த தங்கத்தாற் றூண்க ணாட்டி
மறுவிலா மாணிக்க விட்டம் பூட்டிச்
சாற்றிடுநற் தரளத்தாற் கயிறு மாட்டிச்
சாருமொளி வைரமதாற் பலகை யாக்கி
நாற்றமலர்க் குழல்வள்ளி நங்கை சேனை
நண்ணியிரு பாகத்து மமர்ந்தி ருக்கச்
சீற்றமயில் வாகனஹே கித்த சேர்வாம்
சிவசுப்ர மணியவினி தாடீ ரூஞ்சல்

2. பங்கயா சனன்மாலும் வடந்தொ ட்டாட்டப்
பனிமதியும் பகலவனுந் தீபந் தாங்கக்
கங்கையெனு நங்கைகடி மலர்கள் தூவக்
கலைமகளும் கமலையும்தாம் கவரி வீச
அங்கையற் கண்ணுமையவளும் அரனும் நோக்கி
அருகிருந்து அட்சதைதூய் ஆசி கூறச்
சங்கினொலி தழையுங்ஹே கித்த மேவும்
சிவசுப்ர மணியவினி தாடீ ரூஞ்சல்

3. கும்பமுனி முதலான முனிவர் கூட்டம்
கூறிடுபல் கணத்தவரும் கூடி நிற்க
உம்பரொடு நாரதரும் கீதம் பாட
உருப்பசியும் அரம்பையரும் நடன மாட
செம்பொன்மணி மண்டபத்தில் வள்ளி தேவ
சேனையுடன் வீற்றிருந்தே அருள்செய் கின்ற
சம்புநிறை சோலைதிகழ்ஹே கித்த மேவும்
சிவசுப்ர மணியவினி தாடீ ரூஞ்சல்

4. பிரணவத்தின் பொருளறியாப் பிரம தேவன்
பிரமித்து நிற்கவே சிறையில் இட்டுக்
கரகமட்ச மாலையும்தம் கையிற் கொண்டு
கருணையுடன் சிருட்டிசெய்த கந்த சாமி
பரமசிவன் பிரணவத்தின் பொருளைக் கேட்கப்
பரிவுடனே பகர்ந்தசிவ குருவாம் நாதா
சுரர்துதிசெய் கோயில்ஹே கித்த மேவும்
சிவசுப்ர மணியவினி தாடீ ரூஞ்சல்

5. விண்ணுறையும் தேவரெல்லாம் சூர னென்னும்
விறலவுணற் கடிமையாய்த் துயர மெய்திக்
கண்ணில்நீர் சோரவந்து காலில் வீழ்ந்தே
கைதொழுதே இடர்தீரென்றி ரந்து நிற்ப
மண்முதலாம் அண்டமெலாம் ஆண்ட சூரன்
மிக்கவலி அடக்கியருள் மயூர நாதன்
சண்முகனார் தாசர்வாழ்ஹே கித்த மேவும்
சிவசுப்ர மணியவினி தாடீ ரூஞ்சல்

6. பூதலத்திற் பிறந்து துயர்ப் புணரி மூழ்கிப்
புகலடைந்தார் தமைப்போற்ற அபயந் தந்தே
ஓதரிய உயர்செல்வ வாழ்வு நல்கும்
ஒப்பிலா உயர்வேலா ஆடீ ரூஞ்சல்
மாதவத்துச் சிவயோக அகத்தி யற்கு
மன்னுதமிழ் மலர்ந்தருளும் மணிவாக் கீசா
சூதமிகு வாழைவளர்ஹே கித்த மேவும்
சிவசுப்ர மணியவினி தாடீ ரூஞ்சல்

7. கார்த்திகைநோன் பதுகாப்பார் கருதும் பேற்றை
கடிதுபெறு மாறுதரும் கடம்ப மார்பன்
சீர்த்திவளர் திருப்புகழைப் பாடு வோர்க்கே
சீர்சிறப்பை வேண்டியவா றீயும் பண்பா
ஆர்த்தெழுந்த தகர்வலியை அடக்கி ஊர்வோய்
அருணகிரி புகழ்பாட அருளுஞ் செல்வா
சீர்பரவும் சிட்டர்நிறை ஹேகித்த மேவும்
சிவசுப்ர மணியரினி தாடீ ரூஞ்சல்

8. திருமுடியி லிலங்குவெட்சி மாலை யாட
திகழுமெழிற் குண்டலங்கள் செவியி லாட
இருமருங்கும் வள்ளிதெய்வ யானை யாட
இணையடியில் இலங்குதண்டை கலீரென் றாட
குருநாதன் அடியருளும் குளிர்ந்தே யாட
குதூகலித்துக் குக்குடமு மயிலு மாட
சுருதிமொழி சுகம்பகர்ஹே கித்த மேவும்
சிவசுப்ர மணியரினி தாடீ ரூஞ்சல்

9. சங்கரனார் தருசேயே ஆடீ ரூஞ்சல்
சரவணனே சண்முகனே ஆடீ ரூஞ்சல்
துங்கமயில் வாகனரே ஆடீ ரூங்சல்
துயர்துடைக்கும் குமராநீ ஆடீ ரூஞ்சல்
நங்கைவள்ளி சேனையுடன் ஆடீ ரூஞ்சல்
நண்ணினருக் கினியவரே ஆடி ரூஞ்சல்
செங்கமல வாவிதிகழ்ஹே கித்த மேவும்
சிவசுப்ர மணியரினி தாடீ ரூஞ்சல்

10. பகரரிய வேதமொடா கமமும் வாழி
பன்னிரண்டு திருமுறைபு ராணம் வாழி
நிகரில்திரு நீறுருத்தி ராக்கம் வாழி
நிலைபெற்றே அந்தணரும் ஆவும் வாழி
குகனடியார் குவலயத்திற் குலவி வாழி
குளிர்மாரி பொழிந்துவை யகமும் வாழி
செகதலத்தோர் புகழ்சேர்ஹே கித்த வாழி
சிவசுப்ர மணியநிதம் வாழி வாழி

## சுவாமி சந்நிதானங்களைத் தரிசனஞ் செய்தல்

முன்பு துவாரபாலகரை வணங்கி பின்பு கணநாயகராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்துப் "பகவானே உம்முடைய திருவடிகளை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து, சிவ பெருமானத் தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அநுமதி செய்தருளும்", என்று பிரார்த்தித்துக் கொண்டு, உள்ளே போய், முன் விக்னேஸ்வரரைத் தரிசனஞ் செய்து பின் சிவலிங்கப் பெருமான் சந்நிதியையும், உமாதேவியார் சந்நிதியையும் அடைந்து அருச்சனை செய்வித்து, பழம், பாக்கு, வெற்றிலை முதலியவற்றை நிவேதிப்பித்துக் கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணித் தரிசனஞ் செய்து விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு அதன் பின் சபாபதி. தக்ஷிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையுஞ் சமயகுரவர் நால்வரையும் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

-ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்-

### வத்தளை ஹேகித்த

## அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான பரிபாலனசபைச் செயற்குழுவினரின் சிந்தனைகள்

"கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்" என்பது உலகநீதி. பல்லாண்டு காலமாகப் பல்லாயிரக் கணக்கான சைவ மக்கள் வத்தளை எனும் இப்பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அவர்களது சைவசமய வழிபாட்டிற்கு இங்கு ஒரு சைவாலயம் இருக்கவில்லை. இதை நீண்ட காலமாக யாருஞ் சிந்திக்கவுமில்லை. உலகநீதி தந்த அறக் கட்டளையை மனத்துக் கொண்டு, இந்த ஊரைக் கோயிலுள்ள ஊராக்க விரும்பினோம். துடிப்பு மிக்க சிலர் ஒன்று கூடி ஆலோசித்துத் தொழுநோயாளர் வழிபாட்டிற்கென உருவாக்கம் பெற்றுப் பின் கவனிப்பாரற்றுக் கிடந்த பாலசுப்பிரமணியர் ஆலயத்தைப் பொறுப்பேற்று எம்மிடை பொருளாதார ரீதியிற் குறைவுடையவர்கள் கூடப், பெருமனம் படைத்தவர்களாய்த் தம்மாலியன்ற பங்களிப்புக்களைச் செய்து ஏனையோரையும் ஊக்குவிப்பவர்களாகிப் புனர்நிர்மாணஞ் செய்து, பல இடையூறுகளை, முருகன் திருவருட் செயலாற் சாதுரியமாகக் கடந்து, விவேகத்துடனும் உயர்ந்த நோக்குடனுஞ் செயற்பட்டு, 1996 நவெம்பர் மாதம் 29 ஆம் நாள், தாது வருடம் கார்த்திகைத் திங்கள் புனர்பூச நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் கண்டோம்.

அன்று தொடக்கம்; இல்லை, அதற்கு முன்பிருந்தே எமது வழிபாட்டு முயற்சிகள் ஆரம்பமாகி நடைபெறத் தொடங்கிவிட்டன. அன்றிலிருந்து விசேட உற்வசங்களுடன் கூடிய வழிபாடுகளைச் சந்திக்கின்றோம். ஆலய வளர்ச்சி முருகன் திருவருட் கீர்த்தியென உயரத் தொடங்கியது.

இரண்டாவது வருடாபிஷேக "மணவாளக்கோல" விழாவிற்கான (1998.12.06) இந்த வேளையில் "சைவநீதி" யெனும் பெயர் தாங்கி வெளியாகிக் கொண்டிருக்கும் உயர் தனிச் சீரிதழின் வெகுதானிய கார்த்திகை வெளியீடு எமது ஆலயப் புகழ் பேசுவதாக வெளிவருவது சைவ உலகம் பெருமைப் பட வேண்டிய நிகழ்வாகும். எமது ஆலயச் சிறப்பினை எங்கும் பறை சாற்றும் சைவநீதியையும், அதன் ஆசிரியர் குழுவினரையும் முருகன் அருளால் வளம் பெற்று என்றும் வாழ வேண்டுகின்றோம்.

*"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

*- பரிபாலனசபைத் செயற் குழுவினர்.*

வத்தளை ஹேகித்த

# அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்

# பக்திப்பாமலர்

- பண்டிதர். சி. அப்புத்துரை -

வானுயர் கீர்த்தி மல்க வத்தளை ஹேகித் தயினில்
தானுயர்ந் தணிசெய் வேலன் தண்ணளி நினைந்து போற்றத்
தேனுயர் வரத ராஜ விநாயக வருவாய் காவாய்
பானுவென் றொளிர வல்ல பாமலர்க் கருவு மாவாய்.

கறைமிடற் றண்ணல் நெற்றிக் கட்பொறி அறுவ ராகப்
பிறைநுதற் கன்னி யர்தம் பேரணைப் பினில்வ ளர்ந்து
முறைமையி லுமைசேர்த் தொன்றாய் முறுவலித் தணைக்க வந்த
இறைசர வணநின் தாழ்க ளிறைஞ்சினம் எமைநீ யாள்வாய்.

தையலர் வள்ளி தேவா தமையணைந் தமர்ந்தாய் வாழி
வையகத் தடிய ராகி வருந்தினம் வாதை போக்கிப்
பையவே நின்ப தத்தைப் பற்றிட வழிச மைப்பாய்
கைமுகன் தம்பி நின்தாள் கருத்தினில் நிறைத்து நின்றோம்.

பொய்யிலைப் புழுகு மில்லைப் போற்றுநின் புகழ்க ளெல்லாம்
உய்வது வேண்டி நாளும் ஒய்விலா தோதி நின்றோம்
வெய்யசூர் தடிந்து தேவர் வேதனை தவிர்த்தாய் எம்மைக்
கைவிடா தணைப்பாய் காலன் கருதுமுன் களம்பு குந்தே.

கங்கையு மதியுஞ் சூடுங் கண்ணுதற் கடவு ளிய
மங்குறோய் மலையின் செல்வி மாதுமை மகிழ்ந்து கண்ட
பொங்கொளிர் ஞானந் தேங்கு போதகத் தருமைத் தம்பி
தங்குவத் தளைஹே கித்தத் தகும்பதி உறைவோய் காக்க.

# ஹேகித்த ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தின் பரிபாலன சபை உறுப்பினர்கள்



முன்வரிசையில் இருப்பவர்கள்: திரு. மு.சண்முகவேல் (பொருளாளர்) திரு. பொன். சண்முகராஜா (காப்பாளர்) திரு.இ. கந்தசாமி (காப்பாளர்) திரு. ரவி சிவகுமார் (தலைவர்) திரு.மா.ப. பாலதுரை (மூத்த காப்ாளர்) திரு. ஆ. முத்தையா (காப்பாளர்) திரு. மா. முத்துக்குமார் (பொதுச் செயலாளர்)

இரண்டாவது வரிசை : திரு. பொன். நவராஜ் (அறநெறிப் பாடசாலை நிர்வாகப் பொறுப்பாளர்) திரு.க. கணேசன் (உப செயலாளர்) திரு. க பூவலிங்கம், திரு. க. சந்திரன் (ஆலய உள்துறை நிர்வாகம்) திரு . சி. ரவிச்சந்திரன் (ஆலய உள்துறை நிர்வாகம்) திரு. வே ஜெயராஜ் (ஆலய உள்துறை நிர்வாகம்), திரு. சி. நடராஜா, (ஆலய நிதி நிர்வாகம்) திரு. மு. இரத்தினம், திரு.N. வீரையா, திரு. ச.மா. ஜெயகுமார் (ஆலய உள்துறை நிர்வாகம்)

மூன்றாவது வரிசை: திரு. செ. ஆறுமுகம் (உப பொருளாளர்) திரு. அ. சுப்பிரமணியம் (உப தலைவர்), திரு.P. சிவலிங்கம், திரு. வே. சுப்பிரமணியம்.
சமுகந்தராதோர் : திரு. க. தமிழ்வாணன் (காப்பாளர்) திரு. மு. பாலசுப்பிரமணியம்.

**Reg. No: QD/66/ News 98**. இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால்
48B, புளூமெண்டோல் வீதி, கொழும்பு - 13. என்னும் முகவரியிலுள்ள
யுனி ஆர்ட்ஸ் இல் அச்சிட்டு 1998-12-03 இல் வெளியிடப்பட்டது.

